பக்கங்கள் - 16
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka
மின்னிதழ்
# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 12 சனிக்கிழமை (25.04.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 128




## நேற்று மட்டும் 49 கொரோனா தொற்றாளர்கள்

# ஊரடங்கு சட்டத்தை மீண்டும் தொடர்ந்து நீடிக்க ஆலோசனை



(கொழும்பு)

திடீரென அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் பரவலை அடுத்து தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கை நீடிப்பதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது. நேற்றும் அதிகளவான கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதையடுத்து பொலிஸ்மா அதிபர், முப்படைகளின் தளபதி ஆகியோரை சந்திக்கும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் கலந்துரையாடலை நடத்தவுள்ளனர். இதன் பின் ஊரடங்கு தொடர்பான விசேட அறிவித்தல் வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (02ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு மருதானையில் கர்பிணிக்கு கொரோனா

### பிறந்த சிசு உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் 415ஆவதாக அடையாளம்காணப்பட்ட கொரோனா நோயாளியான பெண் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளது.

குறித்த பெண் கொழும்பு மருதானை பகுதியை சேர்ந்தவர் எனத் தெரிய வந்துள்ளது. டீ சொய்சா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில். அவருக்கு பிறந்த குழந்தை நேற்றுக் காலை உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை இலங்கையில் அடையாளம்காணப்பட்ட கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 417 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 109 பேர் பூரண குணமடைந்து வீடுகளுக்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

### வெலிசர கடற்படை முகாமில்

## மேலும் 35 படையினருக்கு கொரோனா தொற்று உறுதி

(கொழும்பு)

மேல் மாகாணம் வெலிசர கடற்படை முகாமில் மேலும் 35 கடற்படைச் சிப்பாய்களுக்கு கொரோனா தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த தகவலை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். இதனடிப்படையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 417 (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது. 02

### சாதாரண தர பெறுபேறுகள்

## இம்மாத இறுதியில் வெளியாகும்

(கொழும்பு)

கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளை இம்மாத இறுதியில் வெளியிட எதிர்பார்த்திருப்பதாக பரீட்சைகள் திணைக்கள பிரதி ஆணையாளர் நாயகம் பிரணவதாசன் தெரிவித்தார்.

கடந்த டிசம்பர் மாதம் நடைப்பெற்ற க.பொ.த சாதாரண பரீட்சையில் 7 இலட்சத்து 17ஆயி 02

## கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் இன்னமும் கட்டுப்பாட்டிற்குள் வரவில்லை

### சுகாதார பணிப்பாளர் அனில் ஜாசிங்க எச்சரிக்கை



(கொழும்பு)

கோவிட்-19 கொரோனா வைரஸ் தொற்றுப்பரவல் இன்னமும் கட்டுப்பாட்டிற்குள் வரவில்லை. எனவே தொடர்ந்தும் மக்கள் செயற்பாடுகளில் கட்டுப்பாடுகளை விதித்தாக வேண்டியுள்ளது என கூறும் அரச சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க. மேலும் ஒரு வார கால செயற்பாடுகளை அவதானித்து மாற்று நடவடிக்கைகளை கையாள தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

கோவிட்-19 கொரோனா வைரஸ் தொற்றுநோய் குறித்து சுகாதார பணிப்பகம் மற்றும் அரசாங்கம் அவதானித் 02

யாழ்.போதனா வைத்தியசாலை உள மருத்துவ நிபுணர்
மருத்துவர்
**எஸ்.சிவதாஸ்**
எழுதிய கட்டுரை 05

## கொரோனா 417

(கொழும்பு)

கொரோனா வைரஸ் (Covid-19) தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 49 பேர் நேற்று வெள்ளிக்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் 02

## பாராளுமன்றை மீளக் கூட்டுவதற்கு அரசியலமைப்பில் அதிகாரமில்லை

### ஜனாதிபதி கோட்டாபய திட்டவட்டம்



(கொழும்பு)

புதிய பாராளுமன்றத்தை கூட்டுவதை விடுத்து கலைக்கப்பட்ட பழைய பாராளுமன் றத்தை மீளக்கூட்டுவதற்கான அதிகாரம் அரசியலமைப்பில் இல்லை என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, மகா சங்கத்தினருக்கு எடுத் 02

### ஊரடங்கு வேளையில் துணிகரம்

## யாழில் இரண்டு வீடுகள் உடைக்கப்பட்டு திருட்டு!

### சந்தேகத்தில் ஒருவர் கைது



02

## பைக்கற்றில் கசிப்பு

யாழில் இருவர் கைது 02

## கொரோனா 417...

பிரிவு அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 417ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

109 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

301 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஞ)

## ஊரடங்கு சட்ட...

இதேவேளை நேற்று மொத்தமாக 49 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இலங்கையில் இனங்காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 11 பேர், பண்டாரநாயக்க மாவத்தையைச் சேர்ந்தவர்கள். 30 பேர் வெலிசர கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படை வீரர்கள். ஏனைய ஐவரும் கடற்படை வீரர்களுடன் தொடர்பில் இருந்தவர்களெனவும் அவர்கள் இரத்தினபுரி, குருநாகல், பதுளை, கண்டி பிரதேசங்களைச் சேர்ந்தவர்களெனவும், இறுதியாக இனங்காணப்பட்ட பெண், கொழும்பு மருதானையைச் சேர்ந்தவரெனவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (ஞ)

## இம்மாத இறுதி...

ரத்து 7 பேர் தோற்றியிருந்தனர்.

இந்நிலையில் பெறுபேறுகளை வெளியிடுவதற்கான இறுதி மதிப்பீட்டு நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

நாட்டில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள போதிலும், குறுகிய அளவான உத்தியோகஸ்தர்களை பயன்படுத்தி பெறுபேறுகளை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த உயர்தர பரீட்சை மற்றும் தரம் 5 ற்கான புலமைப்பரிசில் பரீட்சைகள் ஒரு போதும் ஒத்திவைக்கமாட்டாது என்றும் கல்வி அமைச்சின் வட்டாரம் தெரிவிக்கின்றது. (ஞ)

## மேலும் 35 படை...

அத்துடன் வெலிசர கடற்படை முகாமைச் சேர்ந்த 65 கடற்படையினர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (ஞ)

# கேப்பாப்புலவு தனிமைப்படுத்தல் முகாமிலிருந்து இருவர் தப்பியோட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கேப்பாப்புலவு தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்களில் இருவர் தப்பி ஓடியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கொரோனா தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கொழும்பிலிருந்து அழைத்துவரப்பப்பட்ட ஒரு தொகுதியினர் கேப்பாப்புலவு தனிமைப்படுத்தும் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் இருவரே தப்பி ஓடியிருப்பதாகவும் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து அவர்களைத் தேடி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஞ)

நேற்றைய பரிசோதனையில்

## 29 பேருக்கும் தொற்றில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை 29 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், எனினும், அவர்கள் அனைவருக்கும் கொரோனாத் தொற்றில்லையென உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (ஞ-18)

## பைக்கற்றில்...



கசிப்பினை பைக்கற்களில் அடைத்து விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் இரண்டு பேரை கோப்பாய் பொலிஸார் நேற்று மாலை கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சட்டவிரோதமான முறையில் கசிப்பு வியாபாரம் நடைபெறுவதாக கோப்பாய் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் இக் கைது சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விசாரணைகளைமேற் கொண்ட பொலிஸார் சந்தேகத்திற்கிடமாக துவிச்சக்கரவண்டியில் சென்ற இருவரை சோதனையிட்டுள்ளனர்.

அப்போது குறித்த இரு சந்தேக நபர்களிடமிருந்து பைக்கெற்றுகளில் அடைக்கப்பட்ட கசிப்பினை பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்களிடமிருந்து 6 லீட்டர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது. சிறிய சிறிய பைக்கெற்றுக்களில் அடைக்கப்பட்ட நிலையிலேயே குறித்த கசிப்பு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையினை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஞ)

கடற்படையினருக்கு கொரோனா எதிரொலி

# மத்திய மாகாண ஆளுநர் காரியாலயத்திற்கு பூட்டு

(கொழும்பு)

மத்திய மாகாண ஆளுநர் காரியாலயத்தின் சேவகர் ஒருவர் கொரோனா தொற்றுக்கான கடற்படை வீரருடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தமை தெரியவந்ததை அடுத்து ஆளுநர் காரியாலயம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக லலித் யூ கமகே தெரிவிக்கையில்,

கொரோனா தொற்றுக்குள்ளாகியிருக்கும் வெலிசறை கடற்படை முகாமில் இருந்த கடற்படை வீரருடன் ஆளுநர் காரியாலயத்தில் சேவை செய்யும் நபர் ஒருவர் தொடர்பு வைத்திருந்தமை தெரியவந்தது.

அதனையடுத்து பாதுகாப்பை கருத்திற்கொண்டு ஆளுநர் காரியாலயத்தை தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

குறித்த நபர் கடற்படை வீரரின் மோட்டார் வண்டியில் ஏற்பட்ட தொழிநுட்ப கோளாறை திருத்திக்கொடுக்க உதவி செய்திருக்கின்றார். காரியாலய சேவகருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருப்பதாக உறுதிப்படுத்தப்படவில்லை.

இருந்தபோதும் காரியாலய ஊழியர்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு தற்காலிகமாக ஆளுநர் காரியாலயத்தை நேற்று நண்பகலில் இருந்து மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. (ஞ)

## பாராளுமன்ற மீளக் கூட்டுவதற்கு...

துரைத்துள்ளார்.

பழைய பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டி நாட்டை குழப்பமான நிலைக்கு உள்ளாக்க வேண்டியதில்லை என்றும் பழைய பாராளுமன்றத்தை கூட்டக்கூடாது என்பது மகாசங்கத்தினரின் ஏகமனதான தீர்மானம் என்றும் மகாசங்கத்தினர் சுட்டிக்காட்டினர்.

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து வரும் நிலையில் சட்டவாக்கங்களை முன்னெடுக்க பாராளுமன்றத்தைக் கூட்ட வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்திவருகின்றன. இந்நிலையில் தனது நிலைப் பாட்டை ஜனாதிபதி பௌத்த மகா சங்கத்தினருக்கு தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் ஒழிப்புக்கு அரசு முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தற்போதைய நிலைமை குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து மூன்று நிகாயக்களையும் சேர்ந்த மகாசங்கத்தினருக்கு விளக்கினார்.

இதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தனது நிலைப்பாட்டைக் கூறியுள்ளார்.

இச் சந்திப்பு தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொரோனா வைரஸை கட்டுப்படுத்தல், நோய்த்தடுப்பு நடவடிக்கைகள், மக்களுக்கு வழங்கிய நிவாரணங்கள் மற்றும் எதிர்காலத்தில் சுதேச பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் குறித்தும் ஜனாதிபதி விளக்கினார்.

நாடு முகம்கொடுத்துள்ள சவால்களுக்கு மத்தியில் சுகாதார, பாதுகாப்பு துறைகளும் முழு அரச இயந்திரம் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் வழங்கிய ஒத்துழைப்பு பாராட்டத்தக்கதாக இருந்ததாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தனக்கு பெரும்பான்மை மக்கள் ஆணையொன்றினை வழங்கி மக்கள் தன்மீது வைத்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதில் பலமானதொரு பாராளுமன்றத்தின் தேவையை விளக்கிய ஜனாதிபதி, புதிய பாராளுமன்றத்தை கூட்டுவதை விடுத்து பழைய பாராளுமன்றத்தை கூட்டுவதற்கான அதிகாரம் அரசியலமைப்பில் இல்லை என்றும் குறிப்பிட்டார். (ஞ)

## யாழில் இரண்டு வீடுகள் உடைக்கப்...

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி பகுதியில் அமெரிக்கா மற்றும் கனடா குடியுரிமை பெற்றவர்களின் குடும்பங்களின் இருவேறு வீடுகள் உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருட்கள் திருடப்பட்ட நிலையில் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அந்த வீடுகளுக்கு அண்மையிலுள்ள வீட்டில் வசிப்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

அந்த வீடுகளில் திருடப்பட்ட 9 லட்சத்து 45 ஆயிரம் பெறுமதியான பொருட்களும் சந்தேக நபரின் வீட்டிலிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு பின்புறமாக உள்ள வீதியில் இரண்டு வீடுகள் கனடா மற்றும் அமெரிக்க குடியுரிமை பெற்றவர்களுக்கு சொந்தமானது. அவர்கள் ஆண்டு தோறும் வருகை தந்து அந்த வீடுகளில் தங்கியிருந்துவிட்டு குடியுரிமை நாட்டுக்குத் திரும்பிவிடுவர்.

அதேபோல் அண்மையில் வந்து தங்கியிருந்துவிட்டு அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்கும் கனடாவைச் சேர்ந்தவர்கள் கொழும்புக்கும் கடந்த மார்ச் மாதம் திரும்பிவிட்டனர்.

இந் நிலையில் வீடுகளைப் பராமரிப்பதற்கு ஒருவர் பொறுப்பளிக்கப்பட்டிருந்தார். அவர் நேற்று வியாழக்கிழமை அங்கு சென்று பார்த்த போது, இரண்டு வீடுகளும் உடைக்கப்பட்டு பெறுமதியான வீட்டுத் தளபாடங்கள் உள்ளிட்டவை திருட்டுப் போயிருந்தன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த வேளை வீடுகளின் கதவுகளை உடைத்து உட்புகுந்து வீட்டிலிருந்த விலையுயர்ந்த இலத்திரனியல் பொருட்கள் மரத்தளபாடங்கள் போன்ற 9 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் பெறுமதி மதிக்கத்தக்க பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் பிற்பகல் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவில் பராமரிப்பாளரால் முறைப்பாடு வழங்கப்பட்டது.

விசாரணைகளை துரிதமாக முன்னெடுத்த யாழ்ப்பாணப் பொலிஸார், திருட்டு இடம்பெற்ற வீடுகளுக்கு மிக அண்மையாக உள்ள வீட்டு உரிமையாளரைக் கைது செய்தனர். அவரது வீட்டில் திருடப்பட்ட பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டன.

சம்பவத்தையடுத்து சந்தேக நபரின் குடும்பத்தை விசாரணைகளை முன்னெடுக்கும் வகையில் வீட்டுக்காவலில் வைத்ததுடன், சந்தேக நபர் விசாரணைகளுக்காக பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் குற்றப்பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி முனசிங்க தலைமையில் இந்தத் திருட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர் கைது செய்யப்பட்டார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள். விசாரணையின் பின் சந்தேக நபர் நீதவான் முன்னிலையில் முற்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் கூறினர். (ஞ)

## கொரோனா வைரஸ் தொற்றுப்பரவல் இன்னமும்...

துள்ள விடயங்கள் மற்றும் எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்கவுள்ள தீர்மானங்கள் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

கோவிட்-19 கொரோனா வைரஸ் பரவல் இலங்கையில் இன்னமும் முடிவுக்கு கொண்டுவரப்படவில்லை. இன்னமும் நோயாளர்களை அடையாளம் கண்ட வண்ணமே உள்ளோம். அவ்வாறு இருக்கையில் நாட்டினை வழமையான நடைமுறைக்கு அனுமதிக்க முடியாது.

தொடர்ந்தும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு நீண்ட கால சுகாதார வேலைத்திட்டங்களை முன்னெடுத்தாக வேண்டும். ஆகவே மக்கள் இப்போது எவ்வாறான சுகாதார நடைமுறைகளை பின்பற்றுகின்றீர்களோ அதனை தொடர்ந்தும் முன்னெடுத்தாக வேண்டும். எவ்வாறு இருப்பினும் நாடு வழமைக்கு திரும்ப மேலும் சில காலம் தேவைப்படும். கொரோனா வைரஸ் தொற்றினை கட்டுப்படுத்த மேலும் சில காலத்திற்கு கட்டுப்பாடுகளை விதித்தாக வேண்டும்.

இதன்போது பொதுப்போக்குவரத்து, தொழில் நிலையங்கள், வீதிகள், பொது சந்தைகள் என எங்கும் சமூக இடைவெளி கடைப்பிடிக்கப்பட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியாக வேண்டும்.

அதேபோல் சிகை அலங்கார நிலையங்கள் தொடர்ந்தும் மூடப்பட வேண்டும். முச்சக்கரவண்டிகளில் பயணிகள் இருவர் மாத்திரமே பயணிக்க முடியும். பொது போக்குவரத்துகளில் பயணிக்கையில் இடைவெளிகளை பேண வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் நீடிக்கின்றது. மிக முக்கியமாக நாட்டில் தற்போது ஊரடங்கு சட்டம் தற்காலிகமாக பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் திங்கட்கிழமை வரையில் நீடிக்க ஏற்கமனே தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் மேலும் ஒருவார காலம் நிலைமைகள் எவ்வாறானது என்பதை அவதானித்து மக்களின் செயற்பாடுகள் எவ்வாறு அமையும், சுகாதார பணிப்புரைகளை பின்பற்றுகின்றனரா என்பது குறித்து அவதானம் செலுத்தி அதன்போது நிலைமைகள் மோசமாக இருந்தால் நாடளாவிய ரீதியிலான ஊரடங்கை மீண்டும் பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் கொரோனா வைரஸ் குறித்த அவதான செயலணியுடன் விசேட பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. ஊரடங்கு சட்டத்தை தளர்க்க அரசாங்கம் சில மாற்று நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. அதற்கு சுகாதார வேலைத்திட்டம் குறித்து எமது முழுமையான பங்களிப்பை செலுத்தி வருகின்றோம்.

எனினும் நாட்டின் நிலைமைகளை தொடர்ச்சியாக கண்காணித்து உடனடியாக மாற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டிவரலாம் அதற்கேற்றால் போலும் எமது மாற்று நடவடிக்கை திட்டங்கள் உள்ளது என்றார். (ஞ)

# ஆயிரம் குடும்பங்களுக்கு உணவுப் பொருள் உதவி

## ‘தாயகம்’ அறக்கட்டளை வழங்கியது

(யாழ்ப்பாணம்)

கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்காக அமுல்படுத்தப்பட்டிருக்கும் ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மக்களுக்கு தாயகம் அறக்கட்டளை நிறுவனத்தால் உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தாயகம் அறக்கட்டளை நிறுவனத்தின் ஸ்தாபகர் வீ.சிறீதரன் அவர்களின் ஏற்பாட்டில் வழங்கப்படும் இவ் உதவித் திட்டத்தில் இது வரை ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது.

இதேவேளை தாயகம் அறக்கட்டளை நிறுவனம் வசதி குறைந்த மாணவர்களுக்குச் சீருடைகளையும் கற்றல் உபகரணங்களையும் ஏற்கெனவே வழங்கி வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஞா)

## புதுக்குடியிருப்பு தேவிபுரத்தில்

# உணவு கொடுக்கச் சென்ற முச்சக்கரவண்டி உடைப்பு

(யாழ்ப்பாணம்)

புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியில் உலர் உணவு கொடுக்க சென்ற முச்சக்கரவண்டி உடைக்கப்பட்டதுடன் சாரதியும் தாக்கப்பட்டுள்ளார்.

நேற்று குறித்த பகுதியில் சில குடும்பங்களுக்கு உலர் உணவு வழங்குவதற்காக உலகத் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் சென்றுள்ளனர்.

அவர்கள் அங்கு உலர் உணவு பொதிகளை வழங்கி விட்டு சென்ற பின்னர். குறித்த பகுதியில் உள்ள ஒருவர் முச்சக்கர வண்டி சாரதியுடன் முரண்பட்டுள்ளார்.

பின்னர் இரவு முச்சக்கரவண்டியை இடைமறிக்கப்பட்டு முச்சக்கரவண்டியை உடைக்கப்பட்டதுடன். அதன் சாரதியும் தாக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் சாரதி முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார். (ஞா-9)

# வெலிசரவில் கொரோனா எதிரொலி 4 ஆயிரம் பேர் சுயதனிமைப்படுத்தலில்

(கொழும்பு)

வெலிசர கடற்படை முகாமினைச் சேர்ந்த கடற்படை வீரர்களும் அவர்களது குடும்பத்தினர் உட்பட நான்காயிரம் பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் குறித்த அனைவருக்கும் பி.சி.ஆர் பரிசோதனை செய்யப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெலிசர கடற்படை முகாமை சேர்ந்த கடற்படையினர் 60 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

# கொரோனா COVID - 19

## இலங்கையின் நாளாந்த நிலைமை அறிக்கை

| தொற்றுக்கு உள்ளானவர்கள் | குணமடைந்தவர்கள் | மரணமடைந்தவர்கள் | சிகிச்சை பெற்று வருபவர்கள் |
|---|---|---|---|
| 417 | 109 | 007 | 301 |

## உலகளாவிய ரீதியில் நாளாந்த நிலைமை ஒரே பார்வையில்...

| உலகளவில் தொற்றுக்குள்ளானவர்கள் | உலகளவில் குணமடைந்தவர்கள் | உலகளவில் மரணமடைந்தவர்கள் |
|---|---|---|
| 2,801,649 | 775,988 | 195,438 |

| நாடுகள், உலகம் | மொத்த பாதிப்பு | புதிய தொற்றாளர்கள் | மொத்த மரணம் | இன்றைய மரணம் |
|---|---|---|---|---|
| மொத்தம் | 2,801,649 | +78,480 | 195,438 | +4,519 |
| ஐ.அமெரிக்கா | 903,775 | +17,333 | 50,988 | +752 |
| இத்தாலி | 192,994 | +3,021 | 25,969 | +420 |
| ஸ்பெய்ன் | 219,764 | +6,740 | 22,524 | +367 |
| சீனா | 82,804 | +6 | 4,632 | 0 |
| ஜேர்மனி | 154,159 | +1,030 | 5,653 | +78 |
| பிரான்ஸ் | 159,828 | +1,645 | 22,245 | +389 |
| ஈரான் | 88,194 | +1,168 | 5,574 | +93 |
| ஐ.இராச்சியம் | 143,464 | +5,386 | 19,506 | +768 |
| இந்தியா | 24,434 | +1,395 | 780 | +59 |

இன்று அதிகாலை 12.10 நிலைவரப்படி

# வைத்திய நிபுணர் செங்கமலம் தெய்வேந்திரனின் தனித்துவத்தை மறக்கமுடியாது

## இரங்கல் செய்தியில் கலாநிதி ஆறு.திருமுருகன் புகழாரம்

(குப்பிழான்)

பல விருதுகள் பலர் வழங்க முன்வந்த போதெல்லாம் இன்முகத்தோடு வேறொருவரைச் சிபார்சு செய்த வைத்திய நிபுணர். திருமதி செங்கமலம் தெய்வேந்திரனின் தனித்துவத்தை மறக்க முடியாது என சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத் தலைவரும் பிரபல ஆன்மீகச் சொற்பொழிவாளருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் புகழாரம் சூட்டினார்.

யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையின் ஓய்வுநிலை மயக்கமருந்து வைத்திய நிபுணர். வைத்தியகலாநிதி திருமதி செங்கமலம் தெய்வேந்திரன் தனது 81 ஆவது வயதில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழில் காலமானார்.

வைத்திய நிபுணரின் மறைவையொட்டி அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையில் நீண்டகாலம் அரும்பணியாற்றிய அன்னை மாற்று வலுவுள்ள உறவுகளைக் காக்க. ஜெய்ப்பூர் நிறுவனத்தை நிர்வகித்தவர்களில் முதன்மையானவர். பண்பிலே உயர்ந்த பெருமாட்டியின் பிரிவு வேதனை தருகிறது.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவி. சிறந்த சேவையாளனாக விளங்கிய வைத்திய கலாநிதி அமரர் தெய்வேந்திரனின் சேவைகளுக்கெல்லாம் உந்து சக்தியாக விளங்கியவர். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய துர்க்கை அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-18)

# பௌத்த விகாரைக்குள் அழகிய இந்துக்கோயில்





(குருநாகல்)

முற்றிலும் பௌத்த மக்கள் வாழும் ஓர் பிரதேசத்தின் மத்தியில் இருந்த பௌத்த விகாரைக்குள். இலங்கையில் எங்கும் காணக் கிடைக்காத அழகிய வடிவத்துடன் ஓர் சோழர்கால இந்துக் கோயில் அமைந்துள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் ரிதிகம என்னுமிடம் உள்ளது. இங்குள்ள சிறிய மலைப்பாறையின் மீது ரிதிவிஹாரை உள்ளது. மலைப்பாறையின் உச்சிப் பகுதிக்குச் சென்றவுடன் பௌத்த விகாரை. தூபி போன்றவை காணப்படுகின்றன.

இவற்றின் அருகில் அழகிய இந்துக் கோயில் ஒன்றும் காணப்படுகிறது. கருங்கல்லினால் அழகிய வடிவில் செதுக்கப்பட்டுள்ள எட்டுத் தூண்களுடன் கூடிய. சிறிய மண்டபம் ஒன்றும் அதை அடுத்து கருவறையும் காணப்படுகிறது.

இவை முற்றிலும் தமிழர் கட்டடக் கலைப் பாணியில் அமைக்கப்பட்டுள்ளன. கூரையும் கல்லினால் செதுக்கப்பட்டுள்ளது.

பொ.ஆ.11 ஆம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் இக்கோயில் அமைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இலங்கையில். இன்றும்பேணப்பட்டுள்ள கல்லினால் கட்டப்பட்ட. விரல் விட்டு எண்ணக்கூடிய ஓரிரண்டு கோயில்களில் இதுவும் ஒன்றாகும்.

தற்போது இக்கோயில் "வரக்கா வெலந்து விஹாரை" என அழைக்கப்படுகிறது. இவ்விடத்தில் அநுராதபுர காலத்தில் இந்திரகுப்தன் எனும் பிரதானி பலாப்பழம் விற்பனை செய்ததால் இக்கோயிலுக்கு இப்படி ஒரு பெயர் வந்ததாக ஒரு கதையும் உண்டு.

எல்லாள மன்னன் காலத்தில் இப்பகுதியில் இந்து சமயம் மேலோங்கிக் காணப்பட்டிருக்கலாம் என நம்பக் கூடியதாக உள்ளது. ஏனெனில் எல்லாள மன்னனை வென்ற துட்டகைமுனு இங்கு ரிதிவிஹாரை எனும் பௌத்த வழிபாட்டுத் தலத்தை அமைத்தான் எனவும்.

இந்த இடத்திற்கு முதன்முதலாக துட்டகைமுனு சென்றபோது 500 பௌத்த பிக்குகளையும் 1500 இந்து பிராமணர்களையும் அழைத்துச் சென்றான் எனவும் இங்குள்ள பழைமை வாய்ந்த ஓலைச்சுவடி ஒன்றில் எழுதப்பட்டுள்ளது. பிக்குகளை விட மூன்று மடங்கு அதிகமாக பிராமணர்கள் இங்கு அழைத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி ரிதிகம பகுதி பௌத்தர்களை விட தமிழர்கள் செல்வாக்கு மிகுந்த இடமாக இருந்திருக்க வேண்டும் என ஊகிக்கக் கூடியதாக உள்ளது.

எல்லாளன் காலத்தில் இப்பகுதி சைவர்களின் செல்வாக்கு மேலோங்கியிருந்த இடமாக இருந்திருக்க வேண்டும். அக்கால கட்டத்தில் இங்கு இந்துக் கோயில்கள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதும் உறுதியாகத் தெரிகிறது.

இதன் தொடர்ச்சியாகவே சோழர் காலத்தில் இங்கு கற்கோயில் கட்டப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. (ஐ-2)

# செங்கமலம் தெய்வேந்திரனின் மறைவு எமக்கு மிக மன வேதனையை அளிக்கிறது

## வடமாகாண அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

வைத்திய நிபுணர் திருமதி செங்கமலம் தெய்வேந்திரனின் மறைவு எமக்கு மிக மன வேதனையை அளிக்கிறது என வடமாகாண அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தின் மிகவும் கடினமான காலங்களில் யாழ். போதனா வைத்தியசாலையின் நன்கு அறியப்பட்ட மயக்க மருந்து நிபுணராக பணியாற்றியவர் அவரது மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அவருடைய ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம் என அவ் இரங்கல் செய்திக் குறிப்பில் மேலும்குறிப்பிடப்பட்டுள்ளது.(ஐ-2)



நெல்லியடி புளியடி முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபையினரால் மக்களுக்கு இடைக்கால உதவிகள் வழங்கப்பட்டன. நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபையினரால் தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக இடைக்கால உதவிகள் வழங்கல் செயற்றிட்டத்தின் மூலம் உதவிகள் வழங்கப்பட்டன. முதல் கட்டமாக சுகாதார வைத்திய அதிகாரியின் சிபாரிசின் படி 100 கர்ப்பவதிகளுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துணவு பொதிகள் வழங்கப்பட்டன.

இரண்டாம் கட்டமாக நெல்லியடி மற்றும் அதன் அயற் கிராமங்களை சேர்ந்தவர்களுக்குமாக மொத்தம் 85 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. இதன் மூன்றாவது கட்டமாக கரவெட்டி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் சிபார்சின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட இரண்டு மற்றும் ஐந்து வயது உடைய பிள்ளைகளை கொண்ட 100 குடும்பங்களுக்கு சத்துணவுகள் வழங்கப்பட்டன. மூன்று கட்ட செயற்பாடுகளுக்குமாக ரூ.5 இலட்சத்து 34 ஆயிரம் கொடுக்கப்பட்டது. அத்துடன் மேலும் ரூ.ஒரு இலட்சம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைக்காக வழங்கப்பட்டது.

(படம்:-கரணவாய் செய்தியாளர்)

# உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் திங்கள் ஆரம்பம்

(கொழும்பு)

இந்த வருடத்தின் இரண்டாம் தவணைக்கான உயர் நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன.

உயர் நீதிமன்ற பதிவாளரினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொரோனா தொற்று பரவியதால் நீதிமன்றக் கட்டடத் தொகுதி அமைந்துள்ள பிரதேசம் அபாயமுள்ள பகுதியாக மாறியுள்ளதாக குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவசர நிலைமைக்கு அமைய வழக்கொன்றை விசாரிக்க முடியும் என கருதினால். நீதிமன்றத்தின் அபிப்பிராயத்திற்கு அமைய தகுந்த உத்தரவொன்றை பிறப்பிக்க முடியும் என உயர் நீதிமன்றத்தின் பதிவாளர் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ-2)

# வைத்தியசாலைக்கு உதவி



(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தியிடம் வைத்தியசாலைக்குத் தேவையான சில பொருட்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபையின் உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமான கந்தையா வைத்தியநாதனும் சீனாவில் வசிக்கும் அவருடைய மகன் புருசோத்தமனும் அவருடைய துணைவியாரும் வைத்தியசாலைக்குத் தேவையான சில பொருட்களை வழங்கினர். (இ-60)

# கொடிகாமம் விடத்தற்பளை முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர் மரணம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் - விடத்தற்பளை 522 ஆவது படை முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த கொழும்பைச் சேர்ந்த ஒருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு யாழ்.போதனா வைத்தியசாலையில் மரணமடைந்தார்.

கடந்த 22 ஆம் திகதி கொழும்பில் கொரோனா அபாயமுள்ள பகுதியிலிருந்து தனிமைப்படுத்தலுக்காக யாழ்ப்பாணம் - விடத்தற்பளை 522 ஆவது படை முகாமிற்கு அழைத்து வரப்பட்ட 62 வயதான அப்துல் நஸார் என்பவரே இவ்வாறு திடீரென்று மரணமாகினார்.

இருப்பினும் இவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டது. அதேவேளை தாம் குருதி அமுக்கம் காரணமாகவே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-30)

# கொரோனா பெருந்தொற்று

# நமது பயணத்தைப் பாதுகாப்பாக மாற்றிடுவோம்!

கொரோனா வைரஸ் தொற்று உலகளாவிய நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது. அன்றாட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதில் சிக்கல் நிலை உருவாகியுள்ளது.

குறிப்பாக நாம் மேற்கொள்ளும் பயணங்கள் தொடர்பில் மிகுந்த அவதானத்தைச் செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. சமூக தொற்று பரவக் கூடிய அபாயகரமான சூழலில் பாதுகாப்பு அம்சங்கள் இல்லாத பயணங்கள் ஆபத்தானவை. எனின் பாதுகாப்பான பயணம் ஒன்று எவ்வாறு அமையும்? அது தொடர்பான அம்சங்களை விளக்குகின்றது இத்தொகுப்பு.

அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டிய விடயம் யாதெனில். தேவையற்ற பயணம் இச் சூழலில் பொருத்தமானதல்ல. இயன்ற வரை அதிகம் பயணிப்பதை தவிர்க்க வேண்டும். பொதுப் போக்குவரத்து சேவைகள் அல்லது நெரிசலான பயணங்கள் போன்றவை தவிர்க்கப்பட வேண்டிய விடயங்கள் ஆகும். தேவையின் நிமித் தம் இயலுமான வரை தனிநபர் போக்குவரத்து மார்க்கங்களை (இரு சக்கர வாகனங்கள்) பயன்படுத்தல் சிறந்ததாகும்.

பயணம் மேற்கொள்ளும் ஒருவர் கட்டாய தனிநபர் பாதுகாப்பு உத்திகளைக் கையாள வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட முகக்கவசங்கள் அணிதல். சமூக இடைவெளிகளை பேணுதல் மற்றும் தொற்று நீக்கிகளை பயன்படுத்தல் என்பன கட்டாயமானவையாகும்.

பொதுவாக நாம் மேற்கொள்ளும் பயணங்கள் இரண்டு விதமாக அமைகின்றன. குறுந்தூரப் பயணம் மற்றும் நெடுந்தூரப் பயணம் இவ்விரு சந்தர்ப்பங்களிலும் நாம் பின்பற்ற வேண்டிய முக்கிய பாதுகாப்பு அம்சங்களை பார்ப்போம்.

### குறுந்தூர பயணங்கள்

இருசக்கரவாகனங்கள் போன்ற தனிநபர் பயண மார்க்கங்களைப் பயன்படுத்தும்போது முகக் கவசங்கள் அணிவது கட்டாயமானது பயணிகள் தங்களுடன் கையடக்கமான தொற்று நீக்கிகளை வைத்திருப்பது சிறந்ததாகும். தேவையற்ற தொடுகையைத் தவிர்க்க வேண்டும்.


மேலும் பயணிக்கும் போது பொது இடங்களில் எச்சில் துப்புவதை முற்றாக தவிர்க்க வேண்டும். இருசக்கர வாகனங்கள் வீதி சமிக்ஞைகளில் நிற்கும் போது தமக்கிடையே ஒருமீற்றர் (1m) இடைவெளியைப் பேண வேண்டும்.

முன்கூட்டியே திட்டமிட்ட பயணங்களை மேற்கொள்ளுங்கள். உதாரணமாக நகர மத்திக்கு பயணம் செய்யும் தனிநபர் ஒருவர் அங்கு நிறைவேற்றக் கூடிய சகல கருமங்களையும் மேற்கொள்ளலாம் (வங்கி. பொருட் கொள்வனவு போன்றன). இவ்வாறு செய்வதன் மூலம் அதிகம் பயணிப்பதை தவிர்க்கலாம்.

மேலும் நிகழ்நிலை மூலம் ஆற்றக்கூடிய கருமங்களை மேற்கொள்வது பாதுகாப்பானதாக அமையும் (வங்கி கொடுக்கல்-வாங்கல் போன்றன)

தனிநபர் பயணம் ஒன்றை ஆட்டோ மூலமாகவும் மேற்கொள்ளலாம். இங்கு நெரிசலாக பயணிப்பதை தவிர்க்க வேண்டும். ஓட்டுநர் மற்றும் பயணி ஆகியோர் இருக்கும் இடங்களை ஒளி ஊடுருவிடும் திரைகள் மூலம் தனிமைப்படுத்த வேண்டும். ஒவ்வொரு பயணத்தின் முன்பாகவும் பின்பாகவும் வாகனத்தை முழுமையாக தொற்று நீக்கம் செய்ய வேண்டும். பயணத்தின் போது தேவையான பொருட்களை மாத்திரம் எடுத்து செல்ல வேண்டும்.

### பொதுப் போக்குவரத்துச் சேவைகளை (குறிப்பாக பேருந்து சேவை ) பயன்படுத்தும் போது:



ZIG-ZAG ஆசன முறை

- பயணி ஒருவரை குறிக்கின்றது

நேரமுகாமைத்துவம் செய்யப்பட்ட பேருந்து சேவைகள் சிறந்தவையாகும். பேருந்து நிறுத்துமிடங்களில் சமூக இடைவெளிகளைப் பின்பற்றுவது அவசியமாகும். பேருந்து கட்டணங்களுக்குத் தேவையான அளவு பணத்தை செலுத்துவது தேவையற்ற தொடுகையை குறைக்கும். சகல பேருந்துகளும் தொற்று நீக்கி வசதிகளுடன் இருத்தல் அவசியமானது. பேருந்தில் பயணிப்பவர்கள் முகக்கவசங்கள் அணிந்திருப்பதை உறுதி செய்ய வேண்டும். பேருந்தில் ஏறி இறங்குவதற்கு ஒரு வழிப்பாதையைப் பயன்படுத்துவது பொருத்தமானது (ஏறுவதற்கு பின்வாயிலாகவும் இறங்குவதற்கு முன் வாயிலாகவும்). பேருந்துகள், பேருந்து நிலையங்கள் மற்றும் பேருந்து நிறுத்துமிடங்கள் யாவும் நாளாந்தம் தொற்று நீக்கல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும். அனைத்துப் பயண சேவைகளும் நேரக்கட்டுப்பாட்டுடன் இயங்குவது சன நெரிசலை குறைக்க வழி செய்யும்.

மேலும் பேருந்து இருக்கை ஒழுங்குகள் சமூக இடைவெளிகளைப் பேணும் வகையில் இருப்பது பாதுகாப்பானதாக அமையும்.

உதாரணமாக பின்வரும் ஒழுங்கு முறைகளைக் குறிப்பிடலாம்.

### நெடுந்தூர பயணங்கள்

குறுந்தூர பேருந்து பிரயாண பாதுகாப்பு அம்சங்களுடன் பின்வரும் விடயங்களையும் கவனத்தில் கொள்வது அவசியமாகும்

- அத்தியாவசிய தேவைகளுக்கான அனுமதி மாத்திரம் வழங்கல்
- தனிநபர் பயணப்பதிவேட்டை பேணுதல் - travel history/ record
- தனிநபர் ஒருவர் தேவைக்கு அதிகமான வெளி மாவட்ட பயணங்கள் மேற்கொள்வதை கட்டுப்படுத்தல்
- ZIGZAG முறையிலான ஆசன ஒழுங்குகள்
- மட்டுப்படுத்தப்பட்ட பயணிகளின் எண்ணிக்கை
- தொற்றுநீக்கல் நடவடிக்கைகள் (பயணிகள். பொதிகள்)
- பயணிகளுக்கான நோய் நிர்ணய அடிப்படை பரிசோதனைகள் (வெப்ப நிலை)
- சமூக இடைவெளிகளை பின்பற்றல்
- நேரக்கட்டுப்பாடுகளை விதித்தல்

### பின்வரும் சந்தர்ப்பங்களில் பிரயாணம் செய்வது பாதுகாப்பானதல்ல:

- தொற்றுக்குள்ளாயிருத்தல் அல்லது தொற்றான நபருடன் பழகியிருத்தல்.
- அதிக சனநெரிசல் கொண்ட பகுதிகள்.
- நோய் அறிகுறிகளுடன் காணப்படல்.
- தொற்று அபாயம் உள்ள பகுதிகள்.

### எந்தவொரு பயணத்தின் போதும் இவற்றை முற்றாக தவிருங்கள்

- பயணத்தின் போது உணவு மற்றும் தின்பண்டங்கள் உண்பது.
- தேவையற்ற தொடுகைகள்.
- தேவையற்ற பொருட்களை கொண்டு செல்லல்.
- சிறுவர்கள்/ வயது முதிர்ந்தவர்கள் அதிகம் பயணித்தல்.
- குழுவாக பயணம் மேற்கொள்ளல்

கொவிட்-19 தொற்றால் முழு உலகும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. இதிலிருந்து பாதுகாப்பாக மீள்வதே பிரதானமான விடயமாகும். இலங்கை உட்பட பல நாடுகளில் சமூகப் பரவலின் சாத்தியப்பாடு அதிகம் காணப்படுகிறது. சமூக பரவலைத் தடுப்பதில் பிரதான பங்காற்றுவது மட்டுப்படுத்தப்பட்ட பயணங்களே. ஆதலால் இன்று இச்சூழலில் பயணம் செய்யும் ஒவ்வொரு தனி நபரும் தனது சமூகப் பொறுப்பறிந்து செயற்படுவதே இப் பெருந்தொற்றுக்கெதிரான போராட்டத்தில் வெற்றியடைய வழி சமைக்கும்!

**நம் பாதுகாப்பே நம் தேசத்தின் பாதுகாப்பாகும்!**


கலாநிதி பூ. ஐங்கரன்
(சிரேஷ்ட விரிவுரையாளர், இரசாயனவியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் )
சு. சிவானுஜன், ச. அனுலக்சன்
(இறுதியாண்டு மாணவர்கள், இரசாயனவியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் )

## இராசிபலன்

25.04.2020
சித்திரை 12, சனிக்கிழமை
துதியை முற்பகல் 11.33 மணிவரை
கார்த்திகை முன்னிரவு 8.23 மணிவரை
சுபநேரம் 3.00-4.30 மணிவரை
இராகுகாலம் 9.00-10.30 மணிவரை
சந்திராஷ்டமம்-சுவாதி, விசாகம்
கார்த்திகை விரதம்



**மேஷம்** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில்கூட முன்னேற்றம் காண்பீர்கள், வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும்.



**ரிஷபம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், போசன சுகமுண்டு.



**மிதுனம்** எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மனததில இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும்.



**கடகம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.



**சிம்மம்** குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், போசன நன்மையுண்டு.



**கன்னி** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், ஆன்றோர் சந்திப்புண்டு.



**துலாம்** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், பொறுமையால் அமைதி காண வேண்டிய நாள், எடுத்த காரியங்கள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், பிரயாண பயமுண்டு.



**விருச்சிகம்** வருங்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம்.



**தனுசு** புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், ஆரோக்கியமான நாள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.



**மகரம்** பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும்.



**கும்பம்** நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் சுபதகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, பெற்றோர் மீது பிரியம் கூடும்.



**மீனம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

## கொரோனா கோரத்தாண்டவம்

# அமெரிக்காவில் உயிரிழப்பு 50 ஆயிரத்தைத் தாண்டியது

### 8 இலட்சத்து 86 ஆயிரம் பேர் பாதிப்பு

## நாள்தோறும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் பலி

(வோஷிங்டன்)

கொடிய கொரோனா வைரஸ் தாக்கம் அமெரிக்காவில் மனிதப் பேரழிவை ஏற்படுத்திவரும் நிலையில் நேற்றுக் காலை அங்கு உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஐம்பதாயிரத்தைத் தாண்டியது.

அந்நாட்டில் நேற்று முன்தினம் மட்டும் 2 ஆயிரத்து 342 பேர் மரணித்ததுடன் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 50 ஆயிரத்து 236 ஆக அதிகரித்தது.

அத்துடன் நேற்று முன்தினம் மட்டும் அங்கு புதிய நோயாளர்கள் 31 ஆயிரத்து 900 பேர் இனங்காணப்பட்ட நிலையில் மொத்த பாதிப்பு 8 இலட்சத்து 86 ஆயிரத்து 442 ஆக உயர்ந்தது.

அமெரிக்காவில் இதுவரை 47 இலட்சம் பேருக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன் மொத்தமாக பாதிக்கப்பட்ட 8 இலட்சத்துக்கும் அதிகமானவர்களில் 85 ஆயிரத்து 922 பேர் மட்டுமே இதுவரை குணமடைந்துள்ளனர்.

அமெரிக்காவின் நியூயோர்க் மாநிலமே கொரோனாவால் மோசமாகப் பாதிக்கப்பட்டதுடன் அங்கு மட்டும் நேற்று முன்தினம் 507 பேர் மரணித்ததுடன் மொத்த உயிரிழப்பு 20 ஆயிரத்து 861 ஆக அதிகரித்தது. அங்கு 2 இலட்சத்து 70 ஆயிரம் பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனைவிட நியூஜெர்ஸி மாகாணத்தில் நேற்று முன்தினம் 365 பேர் மரணித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-2)



## பொலிஸாரின் சீருடையில் புகைப்படக்கருவி இணைப்பு





(கொழும்பு)

இலங்கையிலுள்ள பொலிஸார், நவீன தொழில்நுட்பங்களை தமது கடமைகளின் போது பயப்படுத்த வேண்டுமென்ற நோக்கில், சீருடையின் ஒரு பகுதியாகப் பயன்படுத்தக்கூடிய புகைப்படக் கருவியொன்றை (கமரா) வழங்க ஆலோசிக்கப்பட்டது.

இந்தப் புகைப்படக் கருவியானது (கமரா), பிரச்சினைகளுக்குத் தீர்வு: முகாமைத்துவம், போக்குவரத்து வாகன முகாமைத்துவத்துக்கும் பெரிதும் உதவக்கூடிய வகையில் அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு தொகை புகைப்படக்கருவிகள் (கமரா) நேற்றுக் கொழும்பில் வைத்து இலங்கை மொபிட்டல் நிறுவனத்தால் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இலங்கைக்கு 7.5 மில்லியன் நிதியுதவி வழங்கியது கனடா

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கனடா 56 ஆயிரம் கனேடிய டொலர்களை (சுமார் ரூ. 7.5 மில்லியன்) நிதியுதவி வழங்கியது. உள்ளூர் முயற்சிகளுக்கான கனேடிய நிதியுதவித் திட்டம் ஊடாக இலங்கையின் தேசிய சமாதானப் பேரவைக்கு இந்த நிதியளிக்கப்பட்டது.

இது தொடர்பில் இலங்கையிலுள்ள கனடா உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்ததாவது,

கொவிட்-19 செயலணியின் சிவில் சமூகக் குழுவின் ஒரு அங்கமாக இலங்கை தேசிய சமாதானப் பேரவையுள்ளது. மாவட்ட மட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மதங்களுக்கு இடையிலான குழுக்கள் உள்ளடங்கலாக, நாடு முழுவதும் கட்டமைக்கப்பட்ட வலையமைப்புடன், நாடு முழுவதிலும் பல மாவட்டங்களில் உலர் உணவுப் பொதிகளை தேசிய சமாதானப் பேரவை வழங்கும். பெரும்பாலானோருக்கு முடக்கம் மற்றும் 24 மணி நேர ஊரடங்கு என்பன பெரும் சவாலாகியுள்ள நிலையில், உதவி அதிகம் தேவைப்படுபவர்களுக்கு தேசிய சமாதானப் பேரவை உதவி வழங்கும்.

முன்னெப்போதும் இடம்பெற்றிராத இந்த உலகளாவிய நெருக்கடிக்கு பதிலளிப்பதில் இலங்கையில் தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்தின் பல்வேறு மட்டங்களைச் சேர்ந்தவர்களின் முயற்சியால் நான் ஈர்க்கப்பட்டதாக இலங்கைக்கான கனடாவின் உயர்ஸ்தானிகர் டேவிட் மக்கினன் தெரிவித்தார்.

இந்த நோயையும் அதன் கடுமையான பொருளாதார தாக்கங்களையும் எதிர்த்துப் போராடும்போது இலகுவில் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு, கனடாவின் ஆதரவின் மூலம் உதவ எதிர்பார்க்கின்றோம். பல்வேறு சமூகங்களுடனும் நாடு முழுவதும் அடையாளங் காணப்பட்ட தேவைக்கு விரைவாக பதிலளிப்பதற்கு தேசிய சமாதானப் பேரவையுடன் பணியாற்றுவதில் தான் மகிழ்ச்சியடைவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொவிட்-19 தொற்றுநோய்க்கு எதிரான போராட்டத்திற்கு பதிலளிப்பாக மற்றும் சமூகத்தில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பல் மற்றும் இன மற்றும் மத குழுக்களுக்கு இடையில் உறவுகளை வலுப்படுத்தும் தமது பணிநோக்கத்தைத் தொடர்வதற்கு, நாடு முழுவதிலும் உள்ள பங்காளர் வலையமைப்பு மற்றும் அரச அதிகாரிகளால் அடையாளங் காணப்பட்ட நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்குவதன் மூலம் நெருக்கடி தணித்தல் செயற்பாடுகளில் தேசிய சமாதானப் பேரவை ஈடுபடும். மாற்றுத்திறனாளிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், கைவிடப்பட்டோர் இல்லங்கள், நீண்ட கால பராமரிப்பு இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களும் இதில் உள்ளடங்கும்.

மக்கள், இனங்கள், மதங்கள், பிராந்தியங்கள் மற்றும் நாடுகளில் இந்த நேரத்தில் ஒற்றுமைக்கான தேவையுள்ளது. கனடாவின் உதவியுடன் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உதவுவதற்கான இந்தத் திட்டத்தின் ஒரு அங்கமாக இருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைவதாக தேசிய சமாதானப் பேரவையின் நிர்வாகப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவித்தார். (இ-7)

## உகன,தமன பிரதேசங்களில் ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தின் உகன, தமன பிரதேசங்களுக்கு தற்காலிகமாக அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டது.

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா இதனைத் தெரிவித்தார்.

முன்னதாக குறித்த இரண்டு பகுதிகளுக்கும் தற்காலிகமாக ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



உன் மனச்சாட்சியே, உலகத்தைப் பார்க்கிற பெரியதும் உண்மையானதுமான நீதிபதி.
- மெக்கலின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஊருக்கே உபதேசம் படையினருக்கு அல்ல...

கொல்லாமை பற்றி ஒருவர் போதனை செய்து கொண்டிருக்கின்றார்.

உயிர்களைக் கொல்வது மாபாவம். இந்த உலகத்தில் எல்லா உயிர்களும் யாரைக் கையெடுத்து வணங்கும் என்று வள்ளுவரிடம் கேட்டால் உயிர்களைக் கொல்லாதவர்களை, புலால் உண்ணாதவர்களை எல்லா உயிர்களும் கையெடுத்து தொழும் என்பார்.

எனவே நாமும் பிற உயிர்களைக் கொல்லாதிருக்க வேண்டும் என அவரின் போதனை நீண்டு செல்கிறது.

இவ்வாறு உரை ஆற்றியவர் உரையாற்றுவதற்கு முன்னதாக இறைச்சிக்காக வீட்டில் நின்ற சேவல் ஒன்றைப் பிடித்து கூட்டில் அடைத்து வைத்திருந்தார்.

தன் கணவன் கொல்லாமை பற்றி உரையாற்றுவதை வீட்டில் இருந்து செவிமடுத்த அவரது மனைவி என் கணவர் திருந்தி விட்டார். இனி அவர் புலால் உண்ணமாட்டார் என்று நினைத்து கூட்டில் அடைத்து வைத்திருந்த சேவலைத் திறந்து விட்டார்.

போதனை முடித்து வீட்டுக்கு வந்த கணவன் தான் அடைத்து வைத்த சேவலைப் பிடிக்கச் செல்கிறார்.

அங்கே கூடு திறந்து கிடக்கிறது. சேவலைக் காணவில்லை. கடும் கோவப்பட்ட அவர் தன் மனைவியிடம் சேவல் எங்கே? என்று கேட்கிறார்.

அதற்கு நீங்கள் தானே கொல்வதும் புலால் உண்பதும் மாபாவம் என்று போதனை செய்தீர்கள்.

அதனால் இனி நீங்கள் புலால் உண்ண மாட்டீர்கள் என்று நினைத்து சேவலைத் திறந்து விட்டு விட்டேன் என்கிறார் மனைவி.

இதைக் கேட்ட கணவன் அது ஊருக்குச் செய்த உபதேசம். உனக்கல்ல என்று பதில் அளித்தார்.

இதை நாம் கூறும்போது எதற்காக இந்தக் கதை இங்கு என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால் அந்த உபதேசம் போலத்தான் இலங்கையில் கொரோனாத் தொற்றுத் தொடர்பான போதனைகளும் உள்ளன.

ஆம், இலங்கையில் கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்கான பணியில் படைத்தரப்பினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கொரோனாவைத் தடுப்பதற்காக மக்களை வீடுகளில் இருக்குமாறும் தேவையில்லாமல் வெளியிடங்களுக்குச் செல்லாமல் இருக்குமாறும் படையினர் போதிக்கின்றனர்.

இவ்வாறு மக்களுக்குப் போதனை செய்யும் படையினர் அந்தப் போதனை ஊருக்கல்லாது தங்களுக்கல்ல என்று நினைத்தனர் போலும்.

அதனால்தான் விடுப்பில் சென்ற படைத்தரப்பினர் நண்பர்களிடம் உறவுகளிடம் ஊர் விட்டு ஊர் என எங்கும் சென்று கொரோனாத் தொற்றைத் தேசமெல்லாம் பரவும் வகை செய்துள்ளனர்.

என்ன செய்வது ஊருக்குச் செய்த உபதேசத்தை இவர்களும் பின்பற்றி இருந்தால் இந்த அபத்தம் ஏற்பட்டிருக்க மாட்டாது.

# உலகம் முழுவதும் 2 இலட்சத்தை நெருங்கும் உயிரிழப்புக்கள்

(ஜெனீவா)

சீனாவின் வுஹான் நகரில் இருந்து பரவத் தொடங்கிய கொரோனா தொற்று தற்போது உலகம் முழுவதும் 200இற்கும் மேற்பட்ட நாடுகளில் கடும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

நேற்றுக்காலை 9 மணி வரையான 85 ஆயிரத்து 434 புதிய நோயாளர்கள் உலகம் முழுவதும் இனங் காணப்பட்டுள்ள நிலையில் மொத்தப் பாதிப்பு 27 இலட்சத்து 25 ஆயிரத்து 487 பேருக்கு வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

அத்துடன், 6 ஆயிரத்து 618 பேர் நேற்று முன்தினம் மட்டும் உயிரிழந்துள்ள நிலையில் மொத்த உயிரிழப்பு ஒரு இலட்சத்து 91 ஆயிரத்து 57ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, 7 இலட்சத்து 45 ஆயிரத்து 824 பேர் தொற்றிலிருந்து குணமடைந்தனர்.

நாடுகளில் இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ், பிரித்தானியா போன்ற நாடுகளில் கொரோனா வைரஸ் அதிக உயிரிழப்புக்களை ஏற்படுத்தி வந்தநிலையில் நேற்று கணிசமாக உயிரிழப்புக்கள் குறைந்துள்ளன.

அமெரிக்காவை அடுத்து அதிக உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ள இத்தாலியில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 464 பேர் மரணித்துள்ளதுடன் மொத்த மரணங்கள் 25 ஆயிரத்து 549 ஆகப் பதிவாகியுள்ளன.

மேலும், புதிய நோயாளர்கள் 2 ஆயிரத்து 646 பேர் பதிவாகியுள்ள நிலையில் மொத்தமாக அங்கு ஒரு இலட்சத்து 89 ஆயிரத்து 973 பேருக்கு வைரஸ் தொற்றுள்ளமை பதிவாகியுள்ளது.

இதனைவிட, ஸ்பெயினில் 440 பேரின் மரணங்கள் பதிவாகியதுடன் மொத்த மரணங்கள் 22 ஆயிரத்து 157 ஆக அதிகரித்துள்ளன.

அத்துடன், புதிய நோயாளர்கள் 4 ஆயிரத்து 635 ஆக உள்ளதுடன் இதுவரை 2 இலட்சத்து 13 ஆயிரத்து 24 ஆக தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அங்கு 90 ஆயிரம் பேர்வரை குணமடைந்துள்ளனர்.

இதையடுத்து, பிரான்ஸில் கடந்த வாரங்களைவிட குறைந்திருந்தாலும் கடந்த 5 நாட்களாக 500 வரையான உயிரிழப்புக்கள் பதிவாகி வருகின்றன.

இந்நிலையில் நேற்று முன்தினம் 516 ஆக மரணங்கள் பதிவாகியுள்ளன.

பிரான்ஸில் மொத்தமாக 21 ஆயிரத்து 856 பேர் மரணித்துள்ளதுடன் மொத்த வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 58 ஆயிரத்து 183 பேராக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் பிரித்தானியாவில் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள வைரஸால் நேற்று முன்தினம் மட்டும் 638 பேர் மரணித்துள்ளதுடன் மொத்த மரணங்கள் 18 ஆயிரத்து 738 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், 4 ஆயிரத்து 583 புதிய நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் மொத்த பாதிப்பு ஒரு இலட்சத்து 38 ஆயிரத்து 78 ஆக அதிகரித்துள்ளது.

இதனைவிட, ஜேர்மனியில் ஒரு இலட்சத்து 53 ஆயிரத்து 129 பேருக்கு வைரஸ் தொற்று அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் ஒரு இலட்சத்து 3 ஆயிரத்து 300 பேர் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

அந்நாட்டில் 260 பேர் மரணித்துள்ளதுடன் மொத்த மரணங்கள் 5 ஆயிரத்து 575 ஆக அதிகரித்துள்ளன.

மற்றொரு ஐரோப்பிய நாடான பெல்ஜியத்தில் 228 பேர் மரணித்துள்ளதுடன் அங்கு மொத்த மரணங்கள் 6 ஆயிரத்து 490 ஆக அதிகரித்துள்ளன. அங்கு 42 ஆயிரம் பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனைவிட, நெதர்லாந்தில் 123 பேர் மரணித்துள்ளதுடன் ரஷ்யாவில் 42 பேரும், சுவீடனில் அதிகபட்சமாக 84 பேரும் நேற்று மரணித்துள்ளனர். அத்துடன் பிரேஸிலில் நேற்று முன்தினம் 407 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து, அமெரிக்க நாடான கனடாவில் 173 பேர் மரணித்துள்ள நிலையில் மொத்த மரணங்கள் 2 ஆயிரத்து 147 ஆக அதிகரித்துள்ளன.

ஆசியாவில் நேற்று முன்தினம் 358 பேரின் மரணங்கள் பதிவாகியுள்ள நிலையில் அதில் துருக்கியில் 115 பேர் மரணித்துள்ளதுடன் ஈரானில் 90 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், கொரோனா வைரஸ் பரவத் தொடங்கிய சீனாவில் 10 பேருக்கு வைரஸ் தொற்று இனங் காணப்பட்டுள்ளதுடன் கடந்த 5 நாட்களாக உயிரிழப்பு எதுவும் பதிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## அனுமதிப்பத்திரத்தை தவறாகப் பயன்படுத்திய பாரவூர்திச் சாரதிக்கு சங்கம் கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

கொரோனா நோய்த் தாக்க அபாய வலயமாகக் கருதப்படுகின்ற கொழும்பிலிருந்து பாரவூர்தியில் யாழ்ப்பாணம் வந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் அவர்களை ஏற்றிவந்த பாரவூர்தியானது எமது சங்கத்தின் எந்தவித மான பதிவுகள் மற்றும் எமது சங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்ற எவ்விதச் சேவைகளிலும் ஈடுபடுவதில்லை என்பதோடு அப்பாரவூர்தியானது தனியார் ஒருவரின் சொந்தத் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் தற்போது காணப்படுகின்ற இடர்நிலையில் இவ்வாறு ஊரடங்கு அனுமதிப் பத்திரத்தை தவறாகப் பயன்படுத்தி இவ்வாறான செயற்பாட்டில் குறித்த பாரவூர்திச் சாரதி ஈடுபட்டமையை பாரவூர்திச் சங்கமாகிய நாங்கள் கண்டிப்பதோடு இனிவரும் காலங்களில் இவ்வாறு சமூகத்திற்குப் பாதிப்பு ஏற்படுகின்ற விடயங்களை அனைவரும் தவிர்த்துக் கொள்வது அனைவருக்கும் நன்மை பயக்கக்கூடிய விடயமாக அமையும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றோம் என யாழ்ப்பாண மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் மேலும் தெரிவித்தது. (இ)

## விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, தாண்டவன்வெளிச் சந்தியில் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் நேற்று முன்தினம் உயிரிழந்தார். தாண்டவன்வெளிச் சந்தியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் இருவர் படுகாயமடைந்தனர்.

இந்நிலையில், மட்டக்களப்பு வாவிக்கரை வீதியைச் சேர்ந்த எஸ்.மதுசன் (வயது-25) என்பவர் கவலைக்கிடமான முறையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலிருந்து கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

விபத்து நடந்த தினமான அன்று ஊரடங்கின் காரணமாக பூட்டிவைத்திருந்த மதுபானசாலைகள் அனைத்தும் திறக்கப்பட்ட நிலையில் மட்டக்களப்பில் மதுபானங்களைக் கொள்வனவு செய்வதில் பலர் ஆர்வம் காட்டினர்.

இதனால் மோட்டார் சைக்கிள் போக்குவரத்துக்கள் அதிகமான நிலையில் தனது வேலைத்தளத்திலிருந்து மதிய உணவுக்காக வீடு சென்றபோது மதுபான போத்தல்கள் வாங்கிய இன்னுமொரு இளைஞன் மோட்டார் சைக்கிளுடன் இவர் மீது மோதியபோதே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த நேரத்தில் தாண்டவன்வெளிச் சந்தியில் இருந்த சமிக்ஞை விளக்குகளும் எரியாத நிலையிலேயே காணப்பட்டிருந்தன.

இந்தவிபத்து தொடர்பாக மதுபான போத்தல்களை கொண்டுசென்ற நிலையில், விபத்தினை ஏற்படுத்தியதாக தெரிவிக்கப்படுபவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-2)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### வெற்றிக்கு வழி



புதுமை என்பதற்காக மட்டுமல்ல ஒரு இலட்சியத்தை ஏற்றுக்கொள்வது. பின்னர் அதைவிடப் புதுமையான ஒன்றைக் கண்டதும் பழையதை விட்டு விடுவது. இது உங்கள் ஆற்றல்களைச் சிதறடித்து விடும்.

ஒன்றை எடுங்கள். அதைப் பின்பற்றுங்கள். முடிவு காணும் வரை அதை விடாதீர்கள். அந்த இலட்சியத்திலேயே வெறியாக இருப்பவன் மட்டுமே ஒளியைக் காண்கிறான்.

இங்கொன்றும் அங்கொன்றுமாக நுனிப்புல் மேய்ந்து திரிபவர்கள் ஒருபோதும் எதையும் அடைய மாட்டார்கள். கணநேரம் புலன்களுக்கு ஏதோ சுகம் கிடைக்கலாம். ஆனால் அத்துடன் எல்லாம் முடிந்துவிடும். அவர்கள் எப்போதும் இயற்கைக்கு அடிமைகளே. அவர்களால் ஒருபோதும் புலன்களைக் கடந்து செல்ல முடியாது.

உண்மையிலேயே யோகியாவதற்கு விரும்புபவர்கள், நுனிப்புல் மேய்வதை அடியோடு நிறுத்திவிட வேண்டும். ஒரு இலட்சியத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதையே உங்கள் வாழ்க்கையாகக் கொள்ளுங்கள். அதையே நினையுங்கள். அதையே கனவு காணுங்கள். அந்த இலட்சியத்திற்காக வாழுங்கள்.

மூளை, தசைகள், நரம்புகள் என்று உங்கள் உடலின் ஒவ்வொரு பகுதியும் அந்த இலட்சியத்தால் நிறையட்டும். பிற கருத்துக்கள் அனைத்தையும் விட்டுவிடுங்கள். வெற்றிக்கு வழி இதுவே. ஆன்மீகச் செம்மல்கள் உருவாக்கிய வழியும் இதுவே.

# தன் அகவெளியில் மனம் விட்டுப் பேசுவோம்

தொற்று நோய் உலகில் மிகப் பழமையான நூற்றாண்டுகள் கண்ட ஒரு நோய் ஆகும். ஆரம்பத்தில் முன்னாயத்தமின்றி இருக்கும்போது அதிக பாதிப்பினைத் தந்து பின்னர் மனித குலத்திடம் சரணடைவதே அதன் வழக்கமாகும்.

இந்தக் கொரோனா தொற்றும் விரைவில் கட்டுக்குள் வந்துவிடும் என்பது வரலாறு தந்த பாடமாகும். தனி மனிதனாக இதற்கு நாம் பங்காற்ற வேண்டியவர்களாக உள்ளோம்.

எம் முன்னே உள்ள தெரிவுகள் ஒரு சிலவே.

1. தொற்றிலிருந்து என்னைப் பாதுகாத்தல்
2. தொற்றிக் கொண்ட போதும் மற்றவர்களைப் பாதுகாத்தல்
3. ஆரோக்கியமாகவும் விரைவாகவும் குணமாதலை உறுதி செய்தல்
4. வேதனைகளின்றி, பரிதவிப்பின்றி மரணத்தை ஏற்றுக் கொள்ளல்.

இன்று எல்லோரும் கதைக்கின்ற பொதுச்சுகாதார ஆலோசனைகள் மேற்குறிப்பிட்ட முதலிரண்டு விடயங்களிலேயே கவனத்தைச் செலுத்துகின்றன.

இன்றைய காலகட்டத்தில் அதன் முக்கியத்துவம் மறுதலிக்கப்பட முடியாததுதான். ஆனால் இத்தகைய செய்திகள் மீள மீள உணர்ச்சிகரமாக வலியுறுத்தப்படுவதினாலும் விஞ்ஞான பூர்வமான கருத்துக்கள் முன்வைக்கப்படாததினாலும் பயமும் பீதியும் தேவையற்று எம்மை அலைக்கழிக்கிறது.

இதற்கு நாம் என்ன செய்ய முடியும்? தகவல் வழங்குவோர்களை அவர்களது செயற்பாட்டிலிருந்து மாற்ற முடியாதபோது, நான் என்னளவில் அந்தச் செய்தியை எவ்வாறு எடுத்துக் கொள்கிறேன் என்பதைப் பொறுத்தே மாற்றத்தை உருவாக்க முடியும். அதற்கு விடயம் பற்றிய உண்மையான அறிவினை பெறுதல். நுனிப்புல் மேய்திடாமல் விஞ்ஞான பூர்வமாக விடயத்தை விளங்கிக் கொள்ளுதல் போன்ற செயற்பாடுகள் முக்கியமானவை.

தகவல்களை நாம் எடுத்துக் கொள்ளும் போது ஒருவிதமான எண்ண வடிகட்டலினூடாகவே அறிந்து கொண்டு உணர்ச்சிவயப்படுகின்றோம். பல சந்தர்ப்பங்களில் இவ் எண்ண வடிகட்டலினூடாக நாம் பிறழ்வான தகவல்களைப் பெற்றுக்கொண்டு உணர்ச்சிவயப்பட்டு எமது சிந்தனையைப் பிறழ்வானதாக ஆக்கி விடுகின்றோம். அத்துடன் எம்மிடம் இருக்கும் எதிர்மறை எண்ணங்களின் காரணமாகப் பிழையான தகவல்களையும் விரும்பத்தகாதவற்றையும் வீரியமாக எம்முள்ளே எடுத்துக் கொள்கின்றோம்.

இதனால் பல சந்தர்ப்பங்களில் பூதாகாரப்படுகின்ற அல்லது மிகைப்படுத்தப்படுகின்ற பிறழ்வுகளைக் கொண்டவர்களாக நாம் மாறிவிடுகின்றோம். இவற்றால் எமது மனநிலை பாதிக்கப்பட்டு, குழப்பமடைந்து அன்றாடக் காரியங்களில் ஈடுபாட்டைத் தவிர்த்து மனச்சோர்விற்கு உட்படுகின்றோம்.

இதனைத் தவிர்த்து மன ஆரோக்கியத்தோடு வாழ்வதென்பது இன்றைய காலத்தில் மிக முக்கியமானதாக அமைகிறது. ஒரு நல்ல போசாக்குள்ள மனிதரைக் கொரோனா தாக்கத்திலிருந்து இலகுவாக பாதுகாத்துவிட முடியும் என்பது எவ்வாறு உண்மையோ அதுபோலவே தொற்று ஏற்படும் போது நல்ல மன ஆரோக்கியத்தோடு இருப்பதும் நோயின் தாக்கத்தைப் பெருமளவு குறைத்து விரைவாகக் குணமாகிச் செல்வதற்கு வழிகோலுகின்றது என்பதும் உண்மையே. இதனை ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

எனவே குடும்ப அங்கத்தவர்கள் எல்லோரும் இவ்விடயம் சார்ந்து வெறுமனே தொடர்ந்து மேலெழுந்த வாரியாகக் கதைத்துக் கொண்டிருப்பதைவிட ஒருவர் இவ்விடயத்தினைச் சரியான முறையில் புரிந்து கொண்டு மற்றவர்களுக்கு விளக்குவது நல்லது. மற்றையவர்கள் தமக்கு விருப்பமான காரியங்களில் வீட்டில் இருந்தவாறே ஈடுபடலாம்.

ஏன் அப்படி சொல்கின்றேன்?

இன்றைய சுய தனிமைப்படுத்தலில் எமது செயற்பாடுகள் பலவும் முடக்கப்பட்டுள்ளன என்பது உண்மையே.

ஆனாலும் எமது தன் அகவெளி என்றுமில்லாதவாறு அதிகரித்திருக்கின்றமையும் உண்மையே. இந்த வெளியை நாம் ஆரோக்கியமாகப் பயன்படுத்துவதன் மூலம் முன்னரை விட ஆற்றல்மிக்கவர்களாக எம்மை நாம் வளர்த்துக் கொள்ள முடியும்.

நாம் ஒவ்வொருவரும் பௌதீக ரீதியாகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளோமே தவிர உணர்வு ரீதியாக அல்ல என்பதை நாம் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். நாம் எமது சமூகத்தில் அந்நியப்பட்டிருந்தாலும் அதே சமூகத்தினுள் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எம்மை யாரும் எமது சமூகத்திலிருந்து உளவியல் ரீதியாகத் தனிமைப்படுத்திட முடியாது.

எமது குடும்பத்தினுடைய வெளியும் என்றுமில்லாதவாறு வியாபித்திருக்கின்றது. நேற்று வரை கற்பனை கூடச் செய்துவிட முடியாதிருந்த இந்த வெளி இன்று கைகூடியிருக்கின்றது.

நாம் குடும்பமாக, இழந்தவற்றையும் பகிர மறந்தவற்றையும் மீட்டிட இது மிகப்பெரிய வரப்பிரசாதமாகும்.

இந்த விரியும் மன வெளியில் கற்றுக் கொள்ள வேண்டியவை.

1. ஒரு நெருக்கடி நிலையில் நாம் பதட்டப்படுவதென்பது இயல்பானதே. ஆதியில் மனிதன் வனங்களில் பதட்டப்படாமல் இருந்திருந்தால் எப்பவோ அழிந்து போயிருப்பான்.
நாம் இன்று எதிர்நோக்கும் சவால் என்பது அசாதாரணமானதே. நாம் அதற்குப் பதட்டப்படுவது என்பது சாதாரணமானதே. சில சந்தர்ப்பங்களில் தேவையற்று மிகையாகப் பதட்டப்படுவதே இங்கு பிரச்சினையாகும். அதனை நாம் கணித்து நிதானமாகச் செயற்பட்டால் எல்லாமே சரியாகிவிடும்.
2. நிலைமைகளை எண்ணி கவலைப்படுவதென்பதும் சாதாரண மனித இயல்பேயாகும். தனது வாழ்வு பற்றியும் அதன் எதிர்காலம் பற்றியும் மனிதன் கவலைப்படுவதொன்றும் தவறில்லையே. அவனது வளர்ச்சி கூட இந்தக் கவலைகளிலிருந்து தான் ஆரம்பமானது. சதா கவலைப்பட்டுக் கொண்டு இருப்போமேயானால் எமது வாழ்க்கையை நாம் தொலைக்க நேரிடும். எனவேதான் குறிப்பிட்ட நேரத்தைக் கவலைப்படுவதற்காக ஒதுக்கிக் கொண்டு மற்றைய நேரங்களில் அதனைத் தவிர்த்து மகிழ்வுடன் இருந்திட முடியும். ஆக்க பூர்வமான காரியங்களில் ஈடுபட முடியும்.
3. கால ஓட்டத்தில், இயந்திரமயமான வாழ்க்கை ஓட்டத்தில் நாம் எமது விருப்புக்கள் பலவற்றைத் தொலைத்து விட்டோம். இயற்கையோடு இருந்த பிணைப்பினையும் மறந்துவிட்டோம். மிகவும் வாஞ்சையோடு செய்கின்ற பல விடயங்களைத் தவிர்த்துப் பல நாட்கள் ஆகி விட்டன. இவற்றை நாம் மீளச் செய்வதற்கும் அனுபவிப்பதற்கும் இந்த சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்துள்ள வரப்பிரசாதமாகும்.
4. நாம் எமது நெருங்கியவர்களுக்கு பல வழிகளில் கடமைப்பட்டுள்ளோம். அவர்களது பல செயற்பாடுகளுக்கு நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். வேலைப்பளு காரணமாக நாம் சுகம் விசாரிக்கவும் ஆறுதல் சொல்லவும் மறந்து போய் விட்டோம். அவர்களது தேவைகளைக் கவனிக்காது அசட்டையாகச் சென்று விட்டோம். இந்தச் சந்தர்ப்பத்தில் இவற்றையெல்லாம் செய்து உணர்வுபூர்வமாக உறவினை மேம்படுத்திட முடியும். உறவுகளுக்கிடையிலான நெருக்கத்தில் உண்மை முகத்தினையும் கண்டிட முடியும்.
5. முன் எப்போதையும் விட நாம் பொறுப்புள்ளவர்களாக நடந்துகொள்ள வேண்டிய மிக முக்கியமான காலப்பகுதியாக இது அமைந்துள்ளது. எமது பழக்கவழக்கங்களுக்கு நாமே பொறுப்பானவர்கள் என்பதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். நாம் கற்றுக்கொண்ட விரும்பத்தகாத நடத்தைகளை மாற்றிக் கொள்வதற்கு இது ஒரு உகந்த காலமாகும். அத்துடன் புதிய நல்ல பழக்கங்களைக் கற்றுக் கொள்வதும் கூட இக்காலப்பகுதியில் சாத்தியமானதே. முக்கியமாக உடற்பருமனைக் குறைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்தல் இக்காலப் பகுதியில் இலகுவாக அமைந்துவிடும். ஒரு கிரமமான ஒழுங்குமுறையில் எமது நடத்தைகளை அமைத்துக் கொள்வதன் மூலம் மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

விரியும் எமது தன் அகவெளி, சவால்களுக்கு மத்தியில் நல்ல சந்தர்ப்பங்களைத் தருகின்றது. நாம் இதனை முறையாகப் பயன்படுத்தினால் ஆற்றல்களைப் பெற்று எம்மை மேலும் விருத்தி செய்து கொள்ளலாம்.

அவநம்பிக்கைகளை மெல்ல விலத்தி
புதுநம்பிக்கைகளை ஆழ விதைப்போம்

மருத்துவர் எஸ்.சிவதாஸ்
உள மருத்துவ நிபுணர்
யாழ்.போதனா வைத்தியசாலை



கொரோனா வைரஸ் காரணமாக நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருப்பதனால் பாதிக்கப்பட்டிருந்த கிராம மக்களுக்கு அச்செழு மேற்கு சடையகாடு ஐங்கரன் சனசமூக நிலையத்தினரால் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ஞர்)

# யாழில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த தென்னிலங்கைவாசி உயிரிழப்பு

## சடலம் யாழ்.முஸ்லிம் மைய வாடியில் அடக்கம்

கொரோனா தொற்று சந்தேகத்தில் தனிமைப்படுத்தலுக்காக யாழுக்கு அழைத்து வரப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்த நபருடைய சடலம் யாழ் ஒஸ்மானியா கல்லூரி வீதிக்கருகில் உள்ள முஸ்லிம் மைய வாடியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

பண்டாரநாயக்க மாவத்தையில் இருந்து கொரோனா தொற்று சந்தேகத்தின் அடிப்படையில் குறித்த நபர் மற்றும் அவரின் குடும்பத்தினர் உட்பட 200 க்கும் மேற்பட்டவர்கள் கொடிகாமத்தில் உள்ள தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்

இந்நிலையில் குறித்த நபருக்கு காய்ச்சல் இருந்தமையால் யாழ் போதனா வைத்தியசாலையில் கடந்த 22ஆம் திகதி அனுமதிக்கப்பட்டார்.

இவருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டு கொரோனா தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு குருதி அமுக்கம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

இவரது குடும்பத்தினரும் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதால் அவர்கள் நேற்று யாழ் போதனா வைத்தியசாலையில் சடலத்தை பார்வையிட்டனர். பின்னர் இவரது சடலம் முஸ்லிம் மைய வாடியில் அடக்கம் செய்யப்பட்டது. (ஞா-9)

உங்கள் விளம்பரங்களை
வலம்புரி இல் பிரசுரிப்பதற்கு
எம்முடன் தொடர்பு கொள்க
076 097 3127
076 636 3378
Valampurii@yahoo.com
குறைந்த கட்டணங்களில் பிரசுரிக்க முடியும்

# உற்ற நேரத்தில் உதவிய உறவுகள்




கிறீன் பீல்ட் சனசமூக நிலையத்தினரால் கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக தொழில் செய்ய முடியாது துயருற்றிருக்கும் 194 குடும்பங்களுக்கு தேவையான உலர் உணவுப் பொருட்கள் மற்றும் பண உதவிகளும் வழங்கப்பட்டன. இதற்காக 2 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் நிதியினை தாசன், பாபு, குயின்ரஸ்கருணா, மாதங்கி வீனப்பு குடும்பத்தினர் மற்றும் விற்றர் குடும்பத்தினர் வழங்கி உதவியுள்ளனர்.




கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இரத்தினபுரம் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட வறிய குடும்பங்களைச் சேர்ந்த 74 குடும்பங்களுக்கு நோர்வே ஒஸ்லோ ஜெயதுர்க்கை அம்பாள் ஆலய பிரதமகுரு சிவலோகநாதகுருக்கள் ஜெயம் நிதிப்பங்களிப்பில் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா 1000 ரூபாய் பெறுமதியான உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன. (316)




கிளிநொச்சி மாவட்டத்தில் பொன்னகர் கிராமத்தில் வசிக்கும் 50 குடும்பங்களுக்கு தேவையான அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

பிரித்தானியாவை தளமாகக் கொண்டு இயங்கும் எதிர்காலத்திற்கான பாதை (Path to the Future) எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் நிதியுதவியில் இவ் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. தருமபுரம் பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலயத்தின் தர்மகத்தா ஜீவராசாவினால் இவ் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. --(272)




சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினால் கடந்த சில தினங்களில் கந்தர்மடம், கொக்குவில், வல்வெட்டித்துறை - அரசம்புலம், மானாங்கானை, காவற்கோட்டை, பண்டத்தரிப்பு - அம்மன் வீதி, சரசாலை மத்தி, மறவன்புலவு மத்தி மற்றும் இருபாலை தெற்கு ஆகிய கிராமங்களில் வசிக்கும் சுமார் 350 குடும்பங்களுக்கு தேவையான அத்தியாவசிய உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. இதுவரை சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினால் 1,000க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## (f)ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை...2020

facebook

**தர்சா**




ஊரடங்கு தளர்வு
யாழ்ப்பாணம் 20 ஆம் திகதி முதல்
காலை 5.00 முதல் இரவு 8.00 வரை

**சுகுமார்**



என்னத்தைச் சொல்ல...

**ராணி**



சின்ன வயசில இது கொரோனானு தெரியாம
அடிச்சு அடிச்சு விளையாடியது தப்பா போச்சு.
இன்னைக்கு இப்படி வந்து பழிவாங்குதே

**விනுஜன்**



நீ ஏன்டா அழுவுற?
அதுக்குள்ள கொரோனா வந்து மண்டையை
போட்டுடுவேனான்னு பயமா இருக்குடா

**சிவாங்கி**



Management படிக்கிற பசங்கள விட
மரக்கறி Business பண்ற பசங்களத்தான்
பொண்ணுங்களுக்கு ரொம்ப பிடிக்கும்

**அமுதன்**



ஒருநாளைக்கு 24 மணி நேரம்தான்
ஆனால் எனக்கு மட்டும் ஏதோ
240 மணி நேரம் மாதிரி இருக்கு

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உரிய காலத்தில் உரம் வழங்கப்படாததால் நெற்செய்கை பாதிக்கப்படும் அபாயம்

## உடையார்கட்டு விவசாயிகள் குற்றச்சாட்டு

(புனிக்கன்குளம்)

முல்லைத்தீவு - உடையார்கட்டு குளத்தின் கீழ் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு உரிய காலத்தில் உரம் வழங்கப்படாமையினால், தமது நெற்செய்கைகள் பாதிக்கப்படும் அபாயத்தில் இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

தற்போது தாம் பயிர்ச்செய்கை மேற்கொண்டு 40நாட்கள் ஆகிவிட்ட போதிலும், கமநல சேவைத் திணைக்களத்தினால் எவ்வித உரவகைகளும் வழங்கப்படவில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் உடையார்கட்டு கமநலசேவை நிலைய உத்தியோகத்தரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது,

கூட்டத்தீர்மானத்தின்படி உடையார்கட்டுக் குளத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்ட 1235ஏக்கரில், இதுவரையில் கிட்டத்தட்ட 414 விவசாயிகளுக்குரிய 1085 ஏக்கருக்குமான மூன்று வகையான உரங்களும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அதேவேளை மிகுதி 150ஏக்கர் நெற்செய்கைகளுக்கான உரங்களை விரைவில் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளைத் தாம் எடுப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

கமநல சேவைநிலைய உத்தியோகத்தர் இவ்வாறு தெரிவித்தாலும், தமக்கு உரிய காலத்தில் உரங்கள் வழங்கப்படாததால் பலத்த பாதிப்பை தாம் எதிர்நோக்கியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (9-281)

# வவுனியாவில் காற்றுடன் மழை: வீடுகள் சேதம்



(குருமன்காடு)

வவுனியாவில் கடும் காற்றுடன் திடீரென பெய்த மழை காரணமாக வீடுகள் சில சேதமடைந்துள்ளதுடன், பயன்தரு மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளன.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் வவுனியாவில் திடீரென கடும் காற்றுடன் மழை பெய்தது.

சுமார் ஒரு மணி நேரம் குறித்த மழையானது நீடித்தது. இதன போது வீசிய கடும் காற்றினால் வைரவபுளியங்குளம் பகுதியில் இரண்டு வீடுகள் மற்றும் ஒரு வர்த்தக நிலையம் என்பவற்றின் கூரைகள் தூக்கி வீசப்பட்டுள்ளதுடன், மழை நீரும் உட்புகுந்துள்ளது.

பாதிக்கப்பட்ட இடங்களில் மழை நீர் உட்புகுந்தமையால் அங்கிருந்த பெறுமதியான பொருட்கள் மழையில் நனைந்து நாசமாகியுள்ளது. வீட்டு வளவில் இருந்த வாழை முதலிய பயன்தரு மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளன. (9-250)

# வவுனியாவில் 35 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது



(நெளுக்குளம்)

வவுனியா ஈச்சங்குளம் பகுதியில் கசிப்பு காய்ச்சும் நடவடிக்கை முறியடிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த நடவடிக்கையில் ஈடுபட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் விசேட போதை ஒழிப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் பிற்பகல் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய ஈச்சங்குளம் காட்டுப்பகுதியை முற்றுகையிட்ட பொலிஸார் 35லீற்றர் கசிப்பினை கைப்பற்றியதுடன், அதனை உற்பத்தி செய்வதற்கு பயன்படும் கோடா மற்றும் பரல்களையும் கைப்பற்றியுள்ளனர்.

அதனை காய்ச்சும் நடவடிக்கையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் வவுனியா சுந்தரபுரம் பகுதியை சேர்ந்த நபர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிவித்தனர். (9-299)

# வவு.இ.போ.ச. ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு



(குருமன்காடு)

இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலை ஊழியர்கள் சுகாதார பிரச்சினையினை முன்வைத்து நேற்றுக் காலை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டமையினையடுத்து அதிரடியாக விரைந்து செயற்பட்ட சுகாதார பரிசோதகர்கள் பணிப்புறக்கணிப்பினை முடிவுக்கு கொண்டு வந்தனர்.

கொரோனா தொற்று அச்சம் காரணமாக பேருந்துகள் அனைத்தும் தண்ணீரினால் கழுவிய பின்னர் தொற்று நீக்கும் மருந்துகள் தெளித்து அதன் பின்னரே சேவையில் ஈடுபடுகின்றன. இது வரையிலான காலப்பகுதியில் வவுனியா இ.போ.ச. சாலையிலும் இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்ட போதிலும் நேற்று இ.போ.ச. வவுனியா சாலையிலுள்ள பேருந்துகள் தொற்று நீக்காமையினால் தாம் சேவையில் ஈடுபடமாட்டோம் என தெரிவித்து ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

அதன் பின்னர் இ.போ.ச. வவுனியா சாலைக்கு விரைந்த வவுனியா பொது சுகாதார பரிசோதகர்கள் உரிய அதிகாரிகளுடன் (இ.போ.ச) கலந்துரையாடி பேருந்துகளுக்கு தொற்று நீக்கும் மருந்துகள் தெளித்து சுத்தப்படுத்தி உடனடியாக சேவையில் ஈடுபடுத்துமாறு தெரிவித்தமையினையடுத்து ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு முற்பகல் 11 மணியுடன் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. (9-250)

# வவுனியாவிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு அரிசி ஏற்றுமதி செய்யத் தடை

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட மக்களின் நலனை கருத்தில் கொண்டு எதிர்வரும் இரண்டு கிழமைகளுக்கு மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு அரிசியினை கொண்டு செல்வது தடை செய்யப்பட வேண்டும் என அரச அதிபரினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் தி.தினேஷ்குமார் தெரிவித்தார்.

மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இக்கூட்டத்தில் தற்போது வவுனியா மாவட்டத்தில் காணப்படுகின்ற நிலைமைகள் தொடர்பில் ஆலோசிக்கப்பட்டது. இதில் சுகாதாரத் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக வவுனியா மாவட்டங்களில் அத்தியாவசிய பொருட்களின் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற வாகன சாரதிகள் மற்றும் உதவியாளர்களின் இரத்த மாதிரிகளை பெற்று அதனை பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக ஊரடங்கு விதிக்கப்பட்ட காலப்பகுதியில் அரசாங்கத்தினால் ஆபத்து பிரதேசங்களாக குறிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து எமது மாவட்டத்திற்கு எந்தவிதமான சுகாதார அனுமதிகளும் இல்லாமல் சில நபர்கள் வந்திருந்ததனை அவதானிக்க கூடியதாக இருந்தது.

ஆகவே மாவட்டத்திற்கு ஏற்படக்கூடிய ஆபத்து சம்பந்தமாக சிந்தித்து நாங்கள் வவுனியா மாவட்டத்திற்கு உள்நுழைபவர்களை பரிசோதிப்பதற்கு உரிய நடைமுறைகளை மேற்கொள்ளுமாறு அரச அதிபரினால் பொலிஸாருக்கும் இராணுவ தரப்பினருக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அண்மைக்காலமாக வவுனியா மாவட்டத்தில் கட்டுப்பாட்டு விலையில் அரிசி பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் எதிர்நோக்குவதாக வவுனியா வர்த்தகர் சங்கம் அரசாங்கத்துக்கு முன்வைத்த முறைப்பாட்டின் அடிப்படையாகக் கொண்டு அரச அதிபரினால் வவுனியா மாவட்ட தனியார் அரிசி ஆலைகள் சங்கத்தோடு ஒரு கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

அந்த அடிப்படையில் அவர்கள் அரசினுடைய கட்டுப்பாட்டு விலைக்கு வர்த்தக சங்கத்தினருக்கு அரிசியினை வழங்குவதற்கு உடன்பட்டு இருக்கின்றார்கள். அது தொடர்பில் அந்த அரிசி கிடைப்பனவுகள் பற்றாக்குறையாக இருக்குமாக இருந்தால் வெளி மாவட்டங்களிலிருந்து அரிசியினை வவுனியா மாவட்டத்திற்கு கொண்டு வர அதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அரச அதிபரினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக எதிர்வரும் இரண்டு கிழமைகளுக்கு வவுனியா மாவட்டத்தின் அரிசி கிடைப்பனவை உறுதிப்படுத்துவதற்காக வவுனியா மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு அரிசியினை கொண்டு செல்ல வேண்டாம் எனவும் அரிசி கொண்டு செல்வதை தடை செய்யுமாறு அரச அதிபரினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு சுகாதாரத் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக மறு அறிவித்தல் வரை வவுனியா மாவட்டத்தில் உள்ள அழகு நிலையங்களை திறக்காமல் இருப்பதற்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என மேலும் தெரிவித்தார். (9-250)




# வவுனியாவில் 4,283 ஏக்கரில் சிறுபோக விதைப்பு முன்னெடுப்பு





(நெளுக்குளம்)

வவுனியாவில் சிறுபோக விதைப்பு நடவடிக்கைகளை விவசாயிகள் முன்னெடுத்து வருகின்றனர். அந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் 4283.3 ஏக்கர் பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், 1328 ஏக்கர் பரப்பிலான நெல் நிலங்களில் ஏனைய பயிர்களும் பயிரிடப்படவுள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் தெரிவித்தார். (9-299)

# இலங்கை அரசியலமைப்பும் 19 வது திருத்தம் சம்பந்தமான விமர்சனங்களும்

13

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



ஆயினும் பாராளுமன்றத்தின் முதற் கூட்டத்துக்கு நியமித்த திகதியிலிருந்து நான்கரை வருடங்கள் முடிவுறும் வரை கலைக்க முடியாதென்றும் ஆனால் பாராளுமன்றத்தின் மொத்த எண்ணிக்கையின் (சமூகமளிக்காதோர் உட்பட) மூன்றில் இரண்டுக்கு குறையாத உறுப்பினர்களின் வேண்டுதலாக தீர்மானித்தால் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்கலாம் என திருத்தப்பட்டுள்ளது. (நன்றி- இப் பகுதி சட்டத்தரணி கனக நமநாதன் அவர்களின் கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டது)

அரசமைப்புக்கான 19ஆவது திருத்தத்தில் மிக முக்கியமான மட்டுப்பாடு, மைத்திரிபால சிறிசேனவுக்குப் பின்னர் பதவியேற்கும் எந்த ஜனாதிபதியும் எந்த அமைச்சர் பதவியையும் இலாகாவையும் வகிக்க முடியாது என்பதாகும். உறுப்புரை 45 இன் கீழ் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமே ஓர் அமைச்சராக நியமனம் செய்யப்பட முடியும். மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக மட்டுமல்லாது, பாதுகாப்பு அமைச்சராகவும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சராகவும் பதவி வகித்தார். 19ஆம் திருத்தத்திலுள்ள நிலைமாற்று ஏற்பாடுகளுக்கமைய, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்த அமைச்சுப் பதவிகளையும் இலாகாக்களையும் வகிக்க இடமளிக்கப்பட்டிருந்தது. ஆனால், அடுத்து வரும் எந்த ஜனாதிபதியும், ஜனாதிபதி என்ற அடிப்படையில், அமைச்சரவையின் தலைவராக, அமைச்சரவையில் அங்கம் வகிப்பாரேயன்றி, அவரால் எந்த அமைச்சுப் பதவியையும் இலாகாவையும் தன்னகத்தே வைத்துக்கொள்ள முடியாது. முன்பிருந்த நிறைவேற்று ஜனாதிபதிகள், மிக முக்கியமான அமைச்சு இலாகாக்களைத் தம்மிடம் வைத்திருந்தமையை இங்கு சுட்டிக்காட்டலாம்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன பாதுகாப்பு, திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகாரம், திட்ட அமுலாக்கம், உயர்கல்வி ஆகிய அமைச்சு இலாகாக்களைத் தன்னிடம் வைத்துக் கொண்டார். ரணசிங்க பிரேமதாஸ, பாதுகாப்பு, புத்தசாசனம், கொள்கைத் திட்டமிடல் மற்றும் அமுலாக்கம் ஆகிய இலாகாக்களைத் தன்னிடத்தில் வைத்துக் கொண்டார். டி.பி.விஜேதுங்க, பாதுகாப்பு, நிதி, பௌத்த விவகார இலாகாக்களைத் தன்னகத்தே வைத்துக் கொண்டார். சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, பாதுகாப்பு, பொதுப் பாதுகாப்பு, சட்டஒழுங்கு, நிதி மற்றும் திட்டமிடல், ஊடகம், சமுர்த்தி விவகாரம், உல்லாசத் துறை மற்றும் விமானப் போக்குவரத்து, புத்தசாசனம், கல்வி ஆகிய இலாகாக்களைத் தன்னிடம் வைத்துக் கொண்டார். மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு, நகர அபிவிருத்தி, நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் ஒழுங்கு, நெடுஞ்சாலை, துறைமுகம் மற்றும் கப்பற்போக்குவரத்து இலாகாக்களைத் தன்னிடம் வைத்துக்கொண்டார்.

ஆனால், தற்போதுள்ள ஜனாதிபதியால், இதுபோன்று எந்த அமைச்சுப் பதவிகளையும் வகிக்கமுடியாது. ஜனாதிபதியின் அதிகாரங்கள் மீது, 19ஆம் திருத்தம் கொண்டு வந்த மட்டுப்பாடுகளில், அடுத்து முக்கியம் பெறும் விடயம், பிரதமரின் பதவி தொடர்பானது. இலங்கையில் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறை, அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து, பிரதமர் பதவியானது வலுவற்றதொன்றாகவே காணப்பட்டு வந்துள்ளது. சில பலமான ஆளுமைகள் அப்பதவியை வகித்ததன் மூலமாக, அந்தப் பதவியானது வெளிப்பார்வைக்குப் பலமானதாகச் சிலசமயம் தென்பட்டிருப்பினும், 19ஆம் திருத்தத்துக்கு முன்னதாக, பிரதமர் பதவி ஏனைய அமைச்சுப் பதவிகளிலிருந்து, பெரிதும் வேறுபட்டதொன்றாக இருக்கவில்லை. நிறைவேற்று ஜனாதிபதி, தாம் விரும்பும் நபரைப் பிரதமராக நியமிக்கவும் தான் விரும்பும் போது, பிரதமரைப் பதவி நீக்கவும் அதிகாரத்தைக் கொண்டிருந்தார். 19ஆம் திருத்தம், ஜனாதிபதிக்குப் பிரதமரின் நியமனம், நீக்கம் தொடர்பிலிருந்த அதிகாரங்கள் மீது, மட்டுப்பாடுகளை ஏற்படுத்தியுள்ளதுடன், பிரதமர் பதவியின் வலுவை அதிகரித்துமுள்ளது.

இதன் விளைவை நாம், 2018 ஒக்டோபர் முதல் டிசெம்பர் வரையிலான 52 நாள் அரசமைப்புச் சிக்கல் நிலையின்போது கண்டுகொண்டோம். 19ஆம் திருத்தத்தின் பின்னர், நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நபரையே, பிரதமராக ஜனாதிபதியால் நியமிக்க முடியும். அத்துடன், பிரதமருக்கு எதிராக, நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், பிரதமர் உயிர்நீத்தால், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தால், அவர் பதவி விலகினால் அன்றி ஜனாதிபதியால் பிரதமரைப் பதவி நீக்கவோ, இன்னொரு புதிய பிரதமரை நியமிக்கவோ முடியாது.

மேலும், 19ஆம் திருத்தத்தின் பின்னர், ஜனாதிபதியால் தான் விரும்பிய எவரையும் அமைச்சராகத் தன்னிச்சையாக நியமிக்கவோ, நீக்கவோ முடியாது. மாறாக, பிரதமரின் ஆலோசனையின் பெயரில் மட்டுமே, ஜனாதிபதியால் அமைச்சர்களை நியமிக்கவோ, நீக்கவோ முடியும். இது முன்பு, நிறைவேற்று ஜனாதிபதிக்கு அமைச்சர்களின் நியமனம், நீக்கம் தொடர்பிலிருந்த தன்னிச்சையான அதிகாரத்தின் மீதான குறிப்பிடத்தக்க மட்டுப்பாடாகும்.

19ஆம் திருத்தம் கொண்டுவந்துள்ள இன்னொரு மிக முக்கியமான விடயம், ஜனாதிபதியின் அதிகாரம் மீதான மட்டுப்பாடானது, ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்குரிய அதிகாரம் தொடர்பிலானதாகும். முன்னர் இருந்த ஜனாதிபதிகள், அரசியல் சூழலுக்கேற்ப நாடாளுமன்றத்தை அதன் பதவிக்காலம் முடிய முன்பே, தன்னிச்சையாகக் கலைத்த சந்தர்ப்பங்களைக் கண்டுள்ளோம். ஆனால், 19ஆம் திருத்தத்தின் பின்னர், நாடாளுமன்றமானது தேர்தலொன்றின்மூலம், தெரிவுசெய்யப்பட்ட ஐந்தாண்டு பதவிக்காலத்தின், முதல் நான்கரை ஆண்டு காலப்பகுதியின்போது, நாடாளுமன்றத்தைத் தன்னிச்சையாகக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை.

மூன்றில் இரண்டு பெரும்பான்மைத் தீர்மானத்தின் படி, நாடாளுமன்றம், நாடாளுமன்றத்தைக் கலைக்கும் படி கோரினால் அன்றி, ஜனாதிபதியால் தன்னிச்சைப்படி நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது. ஆயினும், நாடாளுமன்றப் பதவிக்காலத்தின் கடைசி ஆறுமாத காலத்துக்குள், ஜனாதிபதியால் தன்னிச்சைப்படி நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும்.

19ஆம் திருத்தத்தின் இந்த அம்சத்தை, 2018 ஒக்டோபர் முதல் டிசெம்பர் வரையிலான 52 நாட்கள் அரசமைப்புச் சிக்கல் நிலையின்போது, அனுபவ ரீதியாகக் கண்டுகொண்டோம். சம்பந்தன் எதிர் சட்டமா அதிபர் உள்ளிட்ட பத்து அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குகளில், 2018 டிசெம்பரில் இலங்கை உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் தலைமையிலான எழுவர் அமர்வு அளித்த தீர்ப்பானது, 19ஆம் திருத்தத்தின் கீழ் நாடாளுமன்றத்தின் ஆயுட்காலத்தின் முதல் நான்கரை வருடங்களுக்கு, நாடாளுமன்றத்தை ஜனாதிபதி தன்னிச்சையாகக் கலைக்க முடியாது என்பதை உறுதிசெய்ததுடன், நாடாளுமன்றத்தை அவ்வாறு கலைக்க, ஜனாதிபதி சிறிசேன எடுத்த முயற்சியை, நீதிமன்றம் சட்டவலிதற்றதொன்று என்றும் அரசமைப்புக்கு முரணானது என்றும் இரத்துச்செய்திருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

மேலும், 19ஆம் திருத்தத்தின் கீழ், ஜனாதிபதியானவர் நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புடையவராக ஆக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆயினும், தொழில்நுட்ப ரீதியில், ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புடையவராக இருந்தாலும், அவர் நாடாளுமன்றத்துக்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டவரல்ல என்ற நிலையிலேயே, அவருடைய பொறுப்புடைமை அமைகிறது. இது, குறித்த பொறுப்புடைமையின் வலிமைக்குறைவை உணர்த்துவதாக அமைகிறது.

இது மட்டுமல்ல, சட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக, ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்த சட்டப் பாதுகாப்புக் கூட, 19ஆம் திருத்தத்தின் மூலம் தளர்த்தப்பட்டிருக்கிறது. ஜனாதிபதி பொதுவான சட்டப்பாதுகாப்பைத் தொடர்ந்தும் கொண்டிருப்பினும், ஜனாதிபதி உத்தியோகபூர்வமாகச் செய்யும் காரியங்கள், செய்யாது விட்ட காரியங்கள் தொடர்பில், சட்டமா அதிபரைப் பதிலாளியாகக் குறிப்பிட்டு, அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்ய முடியும். இது ஜனாதிபதியின் செயற்பாடுகளின் சட்டபூர்வத்தன்மையை, உயர்நீதிமன்றில் கேள்வி கேட்க வழி சமைத்துள்ளது.

ஆகவே, தற்போதைய ஜனாதிபதி 19ஆம் திருத்தத்துக்கு உட்பட்ட அரசமைப்பின் கீழ், ‘சர்வாதிகாரம்’ கொண்ட ஜனாதிபதியாக அமையமாட்டார் என்பது தெளிவு. எனினும், மறுபுறத்தில் அவரை, அதிகாரமற்ற சம்பிரதாயபூர்வ ஜனாதிபதி என்றும் கூறிவிட முடியாது. பாதுகாப்பு விடயங்களில், ஜனாதிபதியே முழுமையான அதிகாரங்களைக் கொண்டவராகத் தொடர்கிறார் என்பதுடன், அமைச்சரவை மற்றும் நிறைவேற்றுத்துறையின் தலைவராக அவர், கணிசமான அதிகாரங்களைத் தொடர்ந்தும் தன்னகத்தே கொண்டுள்ளார்.

## 19ஆம் திருத்தம் நீக்கப்படல் வேண்டும் என்று கூறுவோரின் கருத்துக்கள்

ஜனாதிபதி உண்மையிலேயே அரச தலைவர் ஒருவருக்குரிய சம்பிரதாயபூர்வமான உரிமைகளை தொடர்ந்து அனுபவித்து வருவார். ஜனாதிபதி ஒரு போரை பிரகடனம் செய்ய முடியும். எவ்வாறிருப்பினும், போரில் ஈடுபடுவதற்குத் தேவையான ஆள் பலம் மற்றும் ஆயுதங்கள் என்பவற்றை பாதுகாப்பு அமைச்சர் வழங்கினாலே ஒழிய, அவருடைய போர் பிரகடனம் வினைத்திறன் மிக்கதாகவோ அல்லது செயல்வடிவம் கொடுக்கக் கூடியதாகவோ இருந்துவர மாட்டாது.

அவர் ஒரு வெளிநாட்டுத் தூதுவரை நியமனம் செய்ய முடியும். ஆனால், அவரால் அவ்விதம் நியமனம் செய்யப்படும் ஆள், எந்த நாட்டிற்கு நியமனம் செய்யப்பட்டுள்ளாரோ அந்த அரசிலிருந்து வெளிநாட்டு அமைச்சர் ‘உடன்பாட்டை’ பெற்றுக்கொண்டிருந்தாலே ஒழிய, அந்த நாட்டின் எல்லைக்குள் அவரால் பிரவேசிக்க முடியாது.

ஜனாதிபதி ஒரு அவசரகால நிலைமையை பிரகடனம் செய்ய முடியும். ஆனால், அவசரகால நிலைமையை செயற்படுத்துவதற்குத் தேவையான மனிதவளம் மற்றும் ஏனைய வளங்கள் என்பவற்றை அமைச்சரவை வழங்காதிருந்தால் அதனால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. அதன் பின்னர் அந்தப் பிரகடனம் நாடாளுமன்றத்தின் ஒப்புதலை பெற்றுக்கொள்ள வேண்டும்.

நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அமர்வின் அங்குரார்ப்பணத்தின் போதும் ஜனாதிபதி அரசாங்கத்தின் கொள்கை குறித்த ஒரு அறிக்கையை வெளியிட முடியும். ஆனால், அந்த அறிக்கை அவருடைய அறிக்கையாக இருந்துவர மாட்டாது. பிரதமரினால் சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவையின் ஒரு அறிக்கையாகவே அது இருந்து வரும்.

இலங்கையின் அரசியலமைப்பு மரபில் அதிகாரத்தில் இருக்கும் ஒருவர் அதிகாரம் குறைந்த ஒருவரின் ஆலோசனையைப் பெற்றுச் செயற்பட வேண்டும் என்ற வாசகத்திற்கு பெரியளவில் மதிப்பில்லை. உதாரணமாக, மாகாண சபைகளைக் கலந்தாலோசித்தே அரச காணிகளைப் பகிர வேண்டும் என்று 13ஆம் திருத்தம் சொல்கின்றது. ஆனால், இந்தப் பிரிவு மதிக்கப்படுவதில்லை. ஆலோசனை கேட்டாலும் ஆலோசனை வழங்கியவரின் பேச்சுப்படி நடக்க வேண்டியதில்லை என்பது தான் இலங்கையின் அரசியலமைப்பு மரபாக இருக்கின்றது. நேரடியாக ஜனாதிபதி தெரிந்தெடுக்கப்படுவதாலும் நிறைவேற்றுத் துறை அதிகாரங்களின் உறைவிடமாக அரசியலமைப்பு ஜனாதிபதியை இனங் காணுவதாலும் பிரதமரின் ஆலோசனையை ஜனாதிபதி எவ்வளவு தூரம் கேட்டு நடக்க வேண்டும் என்ற அரசியல் ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் சந்தேகப்படுவதற்கு காரணங்கள் உண்டு.

ஜனாதிபதியும் பிரதமரும் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருக்கின்ற வேளையில் ஜனாதிபதி ஒத்துழைக்க தீர்மானித்தால் அன்றி ஜனாதிபதியின் அதிகாரங்களை இந்த பிரதமரின் ஆலோசனையைப் பெற வேண்டும் என்ற விதி குறைக் காது என்றே தோன்றுகின்றது. ஜனாதிபதியும் பிரதமரும் ஒரே கட்சியினராக இருந்தால் ஆலோசனை கேட்டல் என்ற பிரச்சினை எழாது.

## 19ஆவது திருத்தத்தை உருவாக்கிய (முன்னாள்) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்திற்கும் நிறைவேற்று அதிகாரத்திற்கும் உள்ள முறுகல் நிலைபற்றி 21.02.2019 ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரை

இன்று இந்த பாராளுமன்றத்தில் அரசியலமைப்பு சபை பற்றி நடத்தப்பட்ட கலந்துரையாடலிலும் அதற்கப்பால் வெளியே பல்வேறு வைபவங்கள் மற்றும் செய்தியாளர் மாநாடுகள்.அரசியல் மேடைகள் ஆகியவற்றிலும் அண்மையில் நாம் பாராளுமன்றத்தில் சுயாதீன ஆணைக் குழுக்கள் பற்றி வெளியிட்ட கருத்து தொடர்பில் பிரதமரும் சபாநாயகரும் பல அறிக்கைகளை வெளியிட்டிருந்தீர்கள்.

இன்று இந்த விவாதம் ஆரம்பமானது முதல் அதில் பங்கேற்ற சில ஆளுந்தரப்பினரும் எதிர்க்கட்சியினரும் இப்பிரச்சினை தொடர்பில் நான் கொண்டிருக்கும் நிலைப்பாட்டை பற்றி மிகவும் தவறான விளக்கங்களை முன்வைத்தவாறு எனது நிலைப்பாட்டை மிகக் கடுமையாக விமர்சித்ததாக எனக்கு அறியக் கிடைத்தது. இருப்பினும் சபாநாயகரின் அனுமதியுடன் இன்று இந்த சபைக்கு நான் வருகை தந்ததன் நோக்கம் அவர்களின் அந்த கருத்துக்களுக்கு பதிலளிப்பதற்காக அல்ல என்பதை முதலில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அத்தோடு எனது நிலைப்பாடு தொடர்பில் இதுவரை ஏனையோரால் முன்வைக்கப்பட்டிருக்கும் கருத்துக்களையும் விமர்சனங்களையும் நான் முற்றுமுழுதாக நிராகரிக்கின்றேன் என்பதை இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

(தொடரும்....)

### வேட்பு மனுவை ரத்துச் செய்ய சூழ்ச்சி

# பாராளுமன்றைக் கூட்டும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மாத்திரமே உண்டு

## டிலான் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

பாராளுமன்றத்தைக் கூட்டும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மாத்திரமே உண்டு. இந் நிலையில் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுவை இரத்துச் செய்யும் அரசியல் சூழ்ச்சி முன்னெடுக்கப்படுகிறது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் செயற்பாடு தொடர்பில் அந்த ஆணைக்குழுவின் தலைவர் உரிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் ஒழிப்புக்கும். மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் பாராளுமன்றத்தை கூட்டுமாறு எதிர்த் தரப்பினர் குறிப்பிடுகின்றார்கள். கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மாத்திரமே உண்டு.

மக்களுக்கு நிவாரணம் வழங்க ஆதரவு வழங்குவதாக தற்போது குறிப்பிடும் எதிர்க்கட்சியினர். கடந்த பெப்ரவரி மாதம் அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த கணக்கு வாக்கெடுப்புக்கு ஏன் ஆதரவு வழங்கவில்லை.

ஜூன் மாதம் 20 ஆம் திகதி பொதுத்தேர்தலை நடத்த எதிர்பார்க்கப்பட்டது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒரு சிலர் பொதுத்தேர்தல் நடத்துவதைத் தவிர்க்கும் விதத்திலான கருத்துக்களை வெளியிடுகின்றனர்.எனவே தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர்.இவ்வாறானவர்கள் தொடர்பில் உடன் கவனம் செலுத்த வேண்டும்.

பொதுத்தேர்தலுக்காக ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுக்களை இரத்துச் செய்ய அரசியல் சூழ்ச்சி மேற்க்கொள்ளப்படுகிறது.இவ்வாறான தவறான முயற்சிகளுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் பாராளுமன்றை எவ்வாறு கூட்ட முடியும்?

## ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய கேள்வி



(கொழும்பு)

சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவால் பொதுத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட நிலையில் எவ்வாறு பாராளுமன்றத்தைக் கூட்ட முடியும். இந்தச் சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு கோருவது ஒழுக்கமற்றதும் சட்டத்துக்குப் புறம்பானதுமாகும் என்று ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரசார செயலாளர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

சுயாதீன தேர்தல்கள் ஆணைக் குழுவால் பொதுத் தேர்தலுக்கான தினம் அறிவிக்கப்பட்டது. இவ்வாறான நிலையில் எவ்வாறு பாராளுமன்றத்தைக் கூட்ட முடியும்? இதிலுள்ள ஒழுக்க விதிமுறை என்ன? அதற்கான அவசியம் என்ன ?

உலகில் எந்த நாட்டிலும் இல்லாதவாறு இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தால் நிவாரணம் வழங்கப்பட்டது. நாட்டிலுள்ள சுமார் 60 இலட்சம் மக்களில் நூற்றுக்கு 80 வீதமான மக்களுக்கு நேரடி நிவாரணம் வழங்கப்பட்டது.

அரச உத்தியோகத்தர்களின் சம்பளம் முன்னரே வழங்கப்பட்டது. அதே போன்று ஓய்வூதியமும் வழங்கப்பட்டது. சமுர்த்தி பயனாளிகள். நீரிழிவு நோயாளர்கள். முதியவர்கள் . அங்கவீனமுற்றவர்கள் என ஒவ்வொரு தரப்பினருக்கும் வெவ்வேறாக கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

அரச வருமானம் கேள்விக் குறியாகியுள்ள நிலையிலேயே அரசாங்கத்தினால் இந்த கொடுப்பனவுகள் அனைத்தும் வழங்கப்பட்டன. அரச வருமானம் என்பது நூற்றுக்கு 95 வீதம் வரி மூலமாகவே கிடைக்கப் பெறுகிறது. இந்த வரி வருமானத்துக்கு இக்குறுகிய காலத்தில் பாரிய சவால் ஏற்பட்டது.

ஆனால் அரசாங்கம் முழுமையாக மக்களைப் பற்றி சிந்தித்தே அனைத்து தீர்மானங்களையும் எடுத்தது. மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று கோசமிட்டவர்கள் தற்போது இது சிக்கல் என்று கூறுகின்றனர். அவ்வாறு எந்த சிக்கலும் கிடையாது.

அரசாங்கத்தால் தமது விருப்பத்திற்கு ஏற்ப நாணயத்தாள்களை அச்சிட முடியாது. அதிகளவாக நாணயத்தாள்களை அச்சிட்டு அரசாங்கம் செலவுகளை முன்னெடுப்பதாக ஒருவர் கூறுவாரானால் அவர் அரச நிதி சட்டம் பற்றி அறியாதவராகவே இருக்க வேண்டும்.

எமக்குப் புதிதாக நாணயத்தாள்களை அச்சிட வேண்டுமானால் அதற்கு மத்திய வங்கி அனுமதியளிக்க வேண்டும். நாட்டுக்குத் தேவையான பணத்தை அச்சிடுவதற்கே அனுமதியளிக்கப்படும். எனினும் அரசியல் தரப்பில் இது தொடர்பில் இருவிதமாகப் பேசுகின்றனர்.

ஒருபுறம் நிவாரணம் வழங்குமாறு கூறுகின்றனர். நிவாரணம் வழங்கிய பின்னர் சட்ட விரோதமாக பணம் அச்சிடப்படுவதாகக் கூறுகின்றனர்.

தேர்தல் காலத்தில் எதிர்க்கட்சியினரால் இவ்வாறான கருத்துக்கள் முன்வைக்கப்படுவது சாதாரணமானதாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பேலியகொடை மீன் விற்பனை நிலையத்தில் எவருக்கும் கொரோனாத் தொற்றில்லை



(பேலியகொடை)

பேலியகொடை மத்திய மீன் விற்பனை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். (PCR) பரிசோதனையில் எவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று இல்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

இந்நிலையில். குறித்த மீன் விற்பனை நிலையத்தில் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட 529 பேரில் எவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை. கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நபரான பிலியந்தலை மீன் வியாபாரி சென்ற இடமான பேலியகொடை மத்திய மீன் விற்பனை நிலையத்திலுள்ள 529 பேரிடம் கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கொட்டாங்கச்சி சாமியார்

“புத்தாண்டு வாழ்த்துக்கள்!”அப்படி என்று சொல்லிக் கொண்டே எங்க வீட்டுக்கு வந்தார் என்னுடைய நண்பர்.‘‘வாங்க சேர் என்று கூப்பிட்டு வீட்டுக்குள்ளே உட்கார வைத்தேன்.

“ என்ன சாப்பிடுகின்றீர்கள்? காபியா? ரீயா? ”என்று கேட்டேன்.

“ இன்றையிலேயிருந்து புதுசா ஒரு நல்ல பழக்கத்தைக் கடைப்பிடிக்கப் போறேன்! ” என்றார்.“ என்ன அது? ”என்று கேட்டேன்.

“வேண்டப்பட்டவர்கள் எதைக் கொடுத்தாலும் அதை வேண்டாம் என்று சொல்லாமல் சாப்பிடுறது!” அப்படி என்றார்.

‘‘ அப்படி என்றால் இன்றைக்குத் தகவலை அவசியம் நீங்க கேட்கணும்! ”என்றேன்.

“சொல்லுங்க.. கேட்கிறேன் ” என்றார். நான் சொல்ல ஆரம்பிச்சேன். நண்பர் ஒருத்தர் எனக்கு எழுதியனுப்பியிருந்த கதை. ஒரு ஊரிலே ஒரு சாமியார் இருந்தார்.ஒவ்வொரு ஊரா அவர் போய்க்கிட்டே இருப்பார். பேசமாட்டார். எப்பவும் மௌனவிரதம்.அவரு இன்னொரு விரதம் வேறு வச்சிருந்தார்.அதாவது யாராவது சாப்பாடு போடுறேன் என்று கூப்பிட்டுக் கொண்டு போய் எதைப் போட்டாலும் சாப்பிட்டு விடுவது என்கின்ற விரதம் தனக்குப் பிடிக்குதோ... பிடிக்கலையோ.. எப்படியாவது கஷ்டப்பட்டு சாப்பிட்டு விடுவார்.வாயே திறக்க மாட்டார். சாப்பிடுவதற்கு மட்டும் தான் வாயைத் திறப்பார்! பேசமாட்டார்! இப்படிப் பட்டவர் ஒருநாள் ஒரு தம்பதி வீட்டுக்குப் போனார். அவர்கள் தான் இவரை அழைத்துக் கொண்டு போனார்கள்.

“உட்கார வச்சு இலை போட்டாங்க..” சாப்பாடு பரிமாறினாங்க. இவரும் சாப்பிட ஆரம்பிச்சார். அவர்களுக்கு ஒரு கவலை. அதாவது. இந்த சுவாமி எப்படியும் மௌன விரதத்திலே இருக்கிறவர். அவரா தனக்கு இன்னது வேணும் என்று கேட்டு வாங்கிக் கொள்ள முடியாது அதனாலே இவர் எதை ரசித்துச் சாப்பிடுகிறாரோ அதை இன்னமும் போடலாம் அப்படி என்று நினைத்து அவரை மிகவும் அக்கறையாக கவனித்துக் கொண்டே இருந்தார்கள்.

அன்றைக்கு சமையலிலே எதிர்பாராத விதமா ஒரு தேங்காய் கொட்டாச்சிதுண்டு ஒன்று சின்னதா கலந்துட்டுது. அது சுவாமியார் இரையிலே இருந்தது.அவருதான் எதையும் மிச்சம் வைக்காமல் சாப்பிடுகின்றவராச்சே! அதனாலே கடைசியாக மிகவும் கஷ்டப்பட்டு அந்தக் கொட்டாங்கச்சி ஓட்டை எப்படியோ கடித்து மென்னு முழுங்கி விட்டார்.

அந்தக் கணவர் இதைப் பார்த்துவிட்டார். உடனே மனைவி காதை கடித்தார். ரகசியமாக ஏதோ சொன்னார். அந்த அம்மா உடனே கொல்லைப் பக்கம் ஓடினாங்க. ஒரு கொட்டாங்கச்சியைக் கழுவி எடுத்துக் கொண்டு வந்தார்கள். அதை அம்மியிலே வைத்து பக்குவமாக நொறுக்கி சாமியார் இலையிலே வைத்துவிட்டார்கள்.மிகவும் பணிவாக சாப்பிடுங்க சாமி என்று வேறு வேண்டிக் கொண்டார்கள்.“ இது உங்களுக்குப் பிடிக்கும் என்று எங்களுக்குத் தெரியாமல் போட்விட்டது! மன்னிக்க வேண்டும்! ” என்று வேறு கேட்டுக் கொண்டார்கள்.

சாமியார் முழித்துப் பார்த்தார். தன் விரதத்தின் பேரில் அவருக்கு அசாத்திய கோபம் வந்துவிட்டது! மிகவும் நொந்து போய்விட்டார்.

“என்னடா இது...” இப்பத்தான் ஒரு துண்டை கடித்து மெதுவாக உள்ளே தள்ளினோம். அதற்குள்ளே முழு கொட்டாங்கச்சியே வந்து விட்டதே. என்ன செய்யப் போறோம் என்று நினைத்தார்.

அவர் கண்ணிலே தண்ணி தழும்ப ஆரம்பித்துவிட்டது. விரதத்தை விட முடியாதே. சாப்பிட்டே ஆகணுமே என்ன செய்வது? பல காலமாக கடைப்பிடிக்கிற விரதமாச்சே! மெதுவாக அந்த ஓடை எடுத்து சாப்பிட ஆரம்பித்தார். கண் எல்லாம் கலங்கி போய்விட்டது. இதை அந்த கணவன் பார்த்தார். மனைவியிடம் சொன்னார். ‘‘சுவாமிஜி கண்ணைக் கவனிச்சியா? அவ்வளவும் ஆனந்தக் கண்ணீர் கொட்டாங்குச்சிக்கும் அவருக்கும் எப்படி இவ்வளவு ஒரு சொந்தமோ தெரியலே! ” என்றார்.

அதற்கு அந்த அம்மா சொன்னார்கள். “ வெரிய யோகிகள் எல்லாம் இப்படித்தான். அவர்கள் செய்கை நமக்குப் பிடிபடாது! ” என்றார்கள். “இவ்வளவு தூரத்திற்கு அதை ரசித்து ருசித்து சாப்பிடுவார் என்று தெரிந்திருந்தால்.. நாம் சமைச்சிருக்கவே வேண்டாமே! நிறைய கொட்டாங்கச்சி பொறுக்கிக் கொண்டு வந்திருக்கலாமே! ” என்று வேறு கவலைப்பட்டாங்க.

இரு இதோ வந்துடுறேன் என்று அந்த கணவன் கொல்லைப் பக்கம் ஓடினார். அங்கே கிடந்த கொட்டாங்கச்சியையெல்லாம் பொறுக்கிக் கொண்டு வந்து கொட்டினார்.அந்த அம்மா அவசர அவசரமா அதை நொறுக்கி சாமியார் இலையிலே போட்டுக்கிட்டே இருந்தாங்க. அவரும் மென்னு முழுக்கிக்கிட்டே இருந்தார்.கணவர் பார்த்தார். ஒரு பெரிய கூடை இருந்தால் கொடு... பக்கத்து வீட்டுக்கெல்லாம் போயி ஓடு பொறுக்கிக் கொண்டு வருகிறேன். என்றார். கூடையை எடுத்து கொடுத்தார்கள் அந்த அம்மா.. அவரு அதை வாங்கிக் கொண்டு தெருப்பக்கமாக அவசரமாகப் போனார். அந்த அம்மா கொட்டாங்கச்சி நொறுக்க அம்மி குழவியை எடுக்க அடுப்பங்கரைக்கு அவசரமாக போனாங்க.

சாமியார் பார்த்தார்.இனிமே தாக்குப்பிடிக்க முடியாது. இது தான் சமயம் என்று நினைத்தார். அவசரமாக எழுந்து... கொல்லைப் பக்கமாக ஓடி வேலியை தாண்டி குதித்தார். ஒரே ஓட்டம். மனைவி அதை பார்த்துட்டாங்க.‘‘ சுவாமி கோவிச்சுக் கொண்டு போறார் சீக்கிரம் ஓடிவாங்களேன் என்று கத்தினாங்க. கணவர் கூடையோட ஓடி வந்தார்”.அதுக்குள்ளே அந்த சாமியார் சிட்டாப் பறந்து போயிட்டார். எப்படி இருக்கு இந்தக் கதை? என்று கேட்டேன் நண்பர்களிடம்...! ஹி ஹி என்றார். ஏன் இப்படி சிரிக்கிறீங்க? என்றேன். ஆரம்பத் திலே நான் உங்களிடம் சொன்னதை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன் என்றார். “இருந்தாலும் இன்னைக்கு புது வருடம் அதனாலே நாங்க எதைக் கொடுத்தாலும் நீங்க சாப்பிட்டுத்தான் ஆக வேண்டும்!” என்றேன். நண்பர் யோசித்தார்.“ சரி.. அப்படி என்றால் எனக்கு டம்ளர் இல்லாத காப்பிமட்டும் கொடுங்கள்! ” அப்படி என்றார். எங்கே டம்ளரையும் சாப்பிட வேண்டி வந்துடுமோ? என்கின்ற பயம் அவருக்கு!

# நாடாளுமன்றத் தேர்தலை 3 மாதங்கள் வரையேனும் ஒத்திவைக்க வேண்டும்

## கபே வலியுறுத்து

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று அச்சம் இன்னும் நீங்காததால் நாடாளுமன்றத் தேர்தலை எதிர் வரும் மூன்று மாதங்கள் வரை யேனும் ஒத்திவைக்க வேண்டும் என கபே **(cafee)** அமைப்பு வலியுறுத்தியது.

அந்த அமைப்பின் நிறை வேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீம் இதனைத் தெரிவித்தார்.

ஜூன் 20 ஆம் திகதிக்குள் தேர்தல் ஒன்றை நடத்துவதற் கான உகந்த சூழலை உருவாக்க முடியும் என நாம் நம்பவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

தேர்தலை நடத்துவதற்கு பல வேறு நிபந்தனைகள் உள்ளதாக வும் அவ்வாறான நடவடிக்கை களை நடைமுறைப்படுத்துவதற் கான பூர்வாங்க பணிகளை தற் போது ஆரம்பித்திருக்க வேண் டியது முக்கியம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதுவரை பதிவாகிய கொரோ னாத் தொற்றாளர்களை நோக்கு மிடத்து எதிர்காலத்தில் இன்னும் அதிகமானவர்கள் இனங்காணப் படும்சூழல்தேர்தலுக்கானசூழல்உரு வாக்கப்படுவது சாத்தியம் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அனைத்து அரசியல் கட்சி கள். வேட்பாளர்கள் மற்றும் சுயா தீனக் குழுக்கள் தேர்தலில் போட் டியிடுவதற்கான சூழலை ஏற்ப டுத்துவது நடைமுறையில் கடின மானது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

சில வேட்பாளர்கள் உணவுப் பொதிகளை வழங்கி தமது தேர் தல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் இவ்வா றான தேர்தல் விதிகளுக்கு முர ணான செயற்பாட்டின் மூலம் மக் களே பாதிப்படைவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரச சார்பு கட்சிகள் மாத்தி ரமே தற்போதைய நிலைமையைச் சரிவர பயன்படுத்திக் கொள்வ தாகவும் மற்ற கட்சிகளும். குழு க்களும் இதனால் பாதிக்கப்பட்டு ள்ளதாகவும் அவர் கூறினார்.

இவ்வாறான நிலையில் தபால் மூல வாக்களிப்புக்கான விண் ணப்பங்களை கோருவதற்கான சூழல் ஏற்றதாக இல்லை எனவும் எனவே மேற்குறித்த காரணங் களை மையப்படுத்தி பொதுத் தேர்தலை எதிர்வரும் மூன்று மாத ங்கள் வரையேனும் ஒத்திவைக்க வேண்டும் என மனாஸ் மக்கீம் மேலும் தெரிவித்தார். (இ-7)

# யாழில் மா விலை அதிகரிப்பு

## பாண் உற்பத்தி பாதிக்கப்படலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பாண் உற்பத்தி பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர்கள் சங்கத் தின் செயலாளர் தெரிவித்தார். இறக்குமதி செய்யப்படும் மாவின் விலை அதிகரித்தமையாலும் பாண் உற்பத்திக்குத் தேவையான உப மூலப் பொருட்களின் விலை சடுதியாக அதிகரித்தமை யினாலும் பாண் உற்பத்தி பாதிக்கப்படலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# யாழில் மேலும் 27 பேருக்கு கொரோனா பரிசோதனை

## யாருக்கும் தொற்றில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை 27 பேர் கொரோனாத் தொற்று குறி த்த ஆய்வுகூடப் பரிசோதனை களுக்கு உட்படுத்தப்பட்டனர்.

எனினும். குறித்த பரிசோத னையில் ஒருவருக்கும் கொரோ னாத் தொற்று இல்லையென உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.சத்திய மூர்த்தி தெரிவித்தார்.

அந்த வகையில் பலாலியில் தனிமைப்படுத்தப்பட்ட நான்கு பேர் உள்ளிட்ட தெல்லிப்பழை சுகா தார வைத்திய அதிகாரி பிரி விற்குட்பட்ட எட்டுப் பேர். கொழு ம்பு வாழைத் தோட்டம் பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டு அழைத்து வரப்பட்ட ஐவர் உட்பட யாழ்ப்பா ணம் போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்ட ஆறு பேர். யாழ்ப்பாணம் போதனா வைத்தி யசாலையின் வெளிநோயாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நால் வர். நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட எட்டுப் பேர். கிளிநொச்சி பொது வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் உட்பட 27 பேருக்கே குறி த்த ஆய்வுகூடப் பரிசோதனை கள் மேற்கொள்ளப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-18)

# மின்சார பாவனை 30 வீதத்தால் குறைவு

(கொழும்பு)

இலங்கையில் மின்சார பாவ னையானது 30 சதவீதத்தால் குறைவடைந்தது.

மின்சக்தி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் இதனைத் தெரி வித்தார்.

எனினும். சிக்கனமாகக் கையா ளாவிட்டால் வீட்டு மின் பாவ னையானது அதிகரிக்கக்கூடு மென அவர் தெரிவித்தார்.

எனவே. மின்சாரத்தை மிக வும் சிக்கனமாகப் பயன்படுத்து மாறு. நுகர்வோரை மின்சக்தி அமைச்சின் அதிகாரி கேட்டுக் கொண்டார். (இ-7)

# 5,000 பேர் தொழிலை இழக்கும் நிலை

(கொழும்பு)

கொவிட் 19 வைரஸ் தொற்று காரணமாக. பேருவளை- பெந் தோட்டை சுற்றுலா வலயத்தி லுள்ள நட்சத்திர ஹோட்டல்க ளில் பணியாற்றிய 5.000 பேர். எதிர்காலத்தில் தொழில் வாய்ப் புக்களை இழக்க நேரிடுமென. பெந்தோட்டை சுற்றுலா ஹோட் டல் சங்கத்தின் தலைவர் ரொஹான் கமகே தெரிவித் தார்.

இலங்கையின் சுற்றுலாத் துறை தற்போது எதிர்நோக் கியுள்ள சவால்கள் குறித்து அர சாங்கத்துக்கு அறிவித்ததாகத் தெரிவித்த அவர். ஹோட்டல் துறை பணியாளர்களின் தொழில் பாதுகாப்புக்கு நடவ டிக்கை எடுக்குமாறும் கோரி க்கை விடுத்ததாகவும் தெரி வித்தார்.

அத்துடன். எமது சங்கத்திலு ள்ள 8.000 பேருக்கு அரசாங்க த்தால் வழங்கப்பட்ட 5.000 ரூபாய் கொடுப்பனவும் இதுவரை வழங்கப்படவில்லையெனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# கொரோனா நிவாரண நிதியத்திற்கு அமைச்சர்களின் ஒரு மாத சம்பளத்தை வழங்க பிரதமர் இணக்கம்

(கொழும்பு)

கொரோனா நிவாரண நிதி யத்திற்கு அமைச்சரவை உறுப் பினர்களின் ஒரு மாத சம்பள த்தை வழங்க பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இணக்கம் தெரிவித் ததாக அமைச்சர் மகிந்த அமர வீர கூறினார்.

ஜனாதிபதியின் கொரோனா நிதியத்திற்கு அமைச்சர்கள் ஒரு மாத சம்பளத்தை வழங்கும் யோசனையை நேற்று முன்தி



னம் வியாழக்கிழமை பிரதம ரிடம் முன்வைத்ததாகவும் அத ற்கு பிரதமர் இணக்கம் தெரிவித் ததாகவும் அமரவீர கூறினார்.

அத்துடன். பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் எரி பொருள் விநியோகிக்கும் முனை யத்தின் ஊழியர்களின் ஒரு நாள் சம்பளமான 142 இலட்சம் ரூபாவை பிரதமரிடம் கையளித்த போதே இந்த யோசனையை முன்வைத் ததாக அவர் தெரிவித்தார். (இ-7)

# நாடாளுமன்றத்தைக் கூட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அரசிடம் அரவிந்தகுமார் கோரிக்கை



(கொழும்பு)

தற்போதைய சூழலில் நீதி த்துறையின் ஆலோசனைகளை பெறமுடியாத நிலையில் உடனடி யாக நாடாளுமன்றத்தைக் கூட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென. முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் அரவிந்த குமார் கோரிக்கை விடுத்தார்.

நேற்று அறிக்கை ஒன்றை விடுத்து அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

அவ்வாறு நாடாளுமன்றம் மீளக் கூட்டப்படுமானால். அதனை ஒகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரை முன்னெடுத்துச் செல்லக்கூடிய இயலுமை காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும். தற்போதைய நாடாளு மன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப்பெற்று அதனைத் தொடர்ந்தும் ஆறு வரு டங்களுக்கு நடத்திச் செல்ல முடி யும் எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான சந்தர்ப்பங்கள் இருக்கும்போது. நாடாளுமன்ற த்தை மீளக் கூட்டமாட்டோம் என அடம் பிடிப்பது விதண்டாவாதமா கும் என. அவர் சுட்டிக்காட்டினார்.

கலைக்கப்பட்ட நாடாளுமன் றத்தை மீண்டும் கூட்டப்போவ தில்லை என ஜனாதிபதி விடாப் பிடியாக இருப்பது. ஜனநாயகப் பண்புகளுக்கு முற்றிலும் விரோத மானது எனவும் அரவிந்தகுமார் தனது அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

# காய்த்துக் குலுங்கிய முருங்கைத் தோட்டத்திற்கு தீ வைத்து அழித்த விசமிகள்

(கரணவாய்)

நெல்லியடி 750 வீதியில் அமைந்துள்ள கீரிப்பள்ளித்தோட் டப் பகுதியில் முருங்கைத் தோட்டம் இனம் தெரியாத நபர் களால் எரித்து அழிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த புதன் கிழமை அதிகாலை இடம்பெற் றது.

செல்வரத்தினம் என்பவருக் குச் சொந்தமான முருங்கைத் தோட்டத்திற்கே இவ்வாறு இனம் தெரியாத நபர்களால் சேதம் விளைவிக்கப்பட்டது.

தற்போது சந்தைகளில் முருங்கைக் காய்களின் விலை அதிகமாக இருப்பதால் குறித்த தோட்டத்தின் உரிமையாளருக் குப் பெரும் நட்டம் ஏற்பட்டுள்




ளதாக தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் நெல் லியடி பொலிஸ் நிலையத்திலும் கமநல திணைக்களத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டது. நெல் லியடி பொலிஸார் மேலதிக விசா ரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# கொரோனாவால் கதிகலங்கும் அமெரிக்கா

# பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் வரை ஓயமாட்டேன் - ட்ரம்ப் திடசங்கற்பம்



(வோஷிங்டன்)

கொரோனா வைரஸ் பெயரால் அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அமெரிக்க பொருளாதார வளத்தை முழுமையாக மீட்டெடுக்கும் வரையில் நான் ஓயமாட்டேன் என்று ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்று நோயால் வல்லரசு நாடான அமெரிக்கா கதிகலங்கி வருகிறது. அங்கு 8 1/2 இலட்சத்துக்கும் அதிகமானோரை இந்த வைரஸ் தொற்றுநோய் தாக்கியுள்ளது. 47 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இதில் இருந்து மீள வழி தெரியாமல் ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகம் திணறி வருகிறது.

இந்தநிலையில் வோஷிங்டன் வெள்ளை மாளிகையில் ட்ரம்ப், கடந்த புதன்கிழமை ஊடகவியலாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

கொரோனா வைரசுக்கு எதிரான போரில் அமெரிக்கா பல லட்சம் கோடி டொலர் மதிப்பிலான நிதி சலுகை திட்டங்களை செயற்படுத்தியதால், நாட்டின் கடன் பெருகி இருப்பது குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். அந்தக் கேள்விக்கு ட்ரம்ப் விரிவாக பதில் அளித்தார்.

அமெரிக்கா (கொரானா வைரஸால்) தாக்கப்பட்டுள்ளது. இது ஒரு தாக்குதல்தான். இது காய்ச்சல் மட்டுமல்ல, இதுபோன்ற ஒன்றை யாரும் பார்த்தது இல்லை. கடைசியாக (முதல் உலகப்போரின்போது) 1917இல் தான் இப்படி நடந்ததை பார்த்தோம்.

நமக்கு இப்போது வேறு வழி இல்லை. எல்லாவற்றையும் பற்றி எப்போதுமே நான் கவலைப் படுகிறேன். நாம் பிரச்சினை இது தான் என முடிவு செய்தாக வேண்டும். உலகிலேயே நமது பொருளாதாரம்தான் மிகப் பெரியது. சீனாவை விட, உலகின் பிற நாடுகளை விட நமது பொருளாதாரம் தான் பெரியது. கடந்த 3 ஆண்டுகளில் இந்த பொருளாதாரத்தை நாம் கட்டமைத்தோம்.

ஆனால் ஒரே நாளில் அவர்கள் வந்து விட்டனர். நீங்கள் அதை மூட வேண்டும் என்று கூறி விட்டனர். நாம் மீண்டும் அதைத் திறக்கத்தான் போகிறோம். நாம் மீண்டும் வலுவான நிலைக்கு போவோம்.

நாம் நமது விமான நிறுவனங்களை பாதுகாத்தோம். நாம் நிறைய நிறுவனங்களை காத்தோம். அவைதான் சிறந்த நிறுவனங்களாக 2 மாதங்களுக்கு முன் உருவெடுத்தன. ஆனால் ஒரே நாளில் அவற்றுக்கான சந்தை மூடப்பட்டது.

தற்போது நாடு முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதல் குறையத் தொடங்கியுள்ளது.

இந்தப் போக்கானது, கொரோனா வைரசுக்கு எதிரான நமது உத்திகள் சரியானவை என்பதைத்தான் காட்டுகிறது.

பல மாகாணங்களும் பாதுகாப்பாக பொருளாதார நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கப் போகின்றன. அது மிகவும் உற்சாகம் அளிப்பதாக இருக்கிறது.

அமெரிக்க பொருளாதார வளங்களை நான் முழுமையாக மீட்டெடுக்கிற வரையில் ஓயமாட்டேன். நான் இதை நம்புகிறேன்.

முன்பை விட நமது பொருளாதாரத்தை உயர்த்தப் போகிறோம். நிறைய புத்திசாலிகள் அதைப் பார்க்கிறார்கள். பந்தயம் கட்டுகிறார்கள். பங்குச்சந்தையில் என்ன நடக்கப்போகிறது என்பதை நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள் என ட்ரம்ப் தெரிவித்தார். (ஜ-2)

## உலக சுகாதார அமைப்பிற்கு சீனா மேலதிக நிதியுதவி





(ஜெனீவா)

கொரோனா வைரஸ் கோரத் தாண்டவமாடி வரும் நிலையில் உலக சுகாதார அமைப்பிற்கு கூடுதலாக 30 மில்லியன் டொலர்கள் நிதியுதவி வழங்க உள்ளதாக சீனா அறிவித்துள்ளது.

சீனாவின் ஹூபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டு பிடிக்கப்பட்டது.

தற்போது 210 நாடுகளுக்கு பரவியுள்ள இந்த வைரசால் 26 லட்சத்து 97 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த கொடிய வைரசுக்கு ஒரு லட்சத்து 88 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர்.

இதற்கிடையில், உலகளாவிய சுகாதாரம் தொடர்பான விவகாரங்களையும் "டபிள்யூ.எச்.ஓ' எனப்படும் உலக சுகாதார அமைப்பு கையாண்டு வருகிறது.

சுவிட்ஸர்லாந்து நாட்டின் ஜெனிவா நகரை தலைமையிடமாக கொண்டு செயற்பட்டு வரும் உலக சுகாதார அமைப்பு, ஐக்கிய நாடுகள் சபையின் துணை அமைப்பாகும்.

இந்த அமைப்பில் இந்தியா, அமெரிக்கா, சீனா உட்பட 194 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இத்தனை நாடுகளை உறுப்பினர்களாக கொண்ட உலக சுகாதார அமைப்புக்கு அமெரிக்கா அதிக நிதியுதவி செய்து வந்தது.

இதற்கிடையில், கொரோனா வைரஸ் விவகாரத்தில் உலக நாடுகளுக்கு முன்னெச்சரிக்கை விடுக்கவில்லை எனவும், வைரஸ் தொடர்பான தகவல்களை மறைத்து சீனாவுக்கு ஆதரவாக செயற்பட்டதாக உலக சுகாதார அமைப்பு மீது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பங்கிரங்கமாக குற்றம் சாட்டினார்.

மேலும், அந்த அமைப்புக்கு அமெரிக்கா வழங்கி வந்த நிதியையும் ட்ரம்ப் நிறுத்தி வைத்தார்.

உலக சுகாதார அமைப்புக்கு வழங்கி வந்த நிதி உதவியை அமெரிக்கா நிறுத்தியுள்ள நிலையில் அந்த அமைப்புக்கு சீனா கூடுதல் நிதி வழங்கியுள்ளது.

வளர்ந்து வரும் நாடுகளில் கொரோனா வைரசுக்கு எதிராக உலக சுகாதார அமைப்பு மேற்கொள்ளும் உலகளாவிய முயற்சிகளுக்காக கூடுதலாக 30 மில்லியன் டொலர்களை வழங்குவதாக சீனா அறிவித்துள்ளது.

இது குறித்து, சீன வெளியுறவுத்துறை அமைச்சகத்தில் செய்தித்தொடர்பாளர் ஜெங் ஷுவாங் கூறுகையில்,

"ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள 20 மில்லியன் டொலர்களுடன் சேர்த்து கூடுதலாக 30 மில்லியன் டொலர்கள் வழங்கப்பட உள்ளது.

இது வளரும் நாடுகளில் சுகாதார பணிகளை மேம்படுத்த உதவியாக இருக்கும்" எனத் தெரிவித்தார். (ஜ-2)

## ஆயுதக் கொள்முதல் செய்வதை நிறுத்தி வைக்க வேண்டும்

### இந்தியப் பாதுகாப்புத்துறை முப்படைகளிடம் கோரிக்கை



(டில்லி)

கொரோனா பாதிப்புகள் முற்றிலும் சரியாகும்வரை ஆயுத கொள்முதல் செய்வதை நிறுத்தி வைக்குமாறு முப்படைகளுக்கு அறிவிக்கப்பட்டது.

முப்படைகளுக்கு பாதுகாப்புத் துறையால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. உலக நாடுகளில் தீவிர பாதிப்பு ஏற்படுத்தி வரும் கொரோனா பரவல் இந்தியாவிலும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்தியாவில் நேற்று முன்தினம் புதிதாக ஆயிரத்து 409 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதன்காரணமாக இந்தியாவில் கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தற்போது 21 ஆயிரத்து 700 ஆக அதிகரித்துள்ளது.

இதனிடையே கொரோனா தொற்று மேலும் பரவாமல் இருப்பதற்காக மே 3ம் திகதி வரை நாடு தழுவிய ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையால் இந்திய பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கொரோனா பாதிப்புகள் முற்றிலும் சரியாகும் வரை ஆயுத கொள்முதல் செய்வதை நிறுத்தி வைக்குமாறு முப்படைகளுக்கும் பாதுகாப்புத் துறை கடிதம் ஊடாக அறிவித்துள்ளது.

கொரோனா நிவாரணப் பணிகளுக்காக அதிக அளவில் நிதி செலவிடப்படுவதால், தற்போது ஆயுத கொள்முதல் நடைமுறைகளை நிறுத்தி வைக்கும்படி அதில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

முன்னதாக பிரான்ஸில் இருந்து 36 ரபேல் போர் விமானங்கள் மற்றும் ரஷ்யாவில் இருந்து எஸ்400 ஏவுகணைகள் வாங்க திட்டமிடப்பட்டிருந்தது. மேலும் அமெரிக்கா மற்றும் ரஷ்யா உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலிருந்து தாங்கிகள், பீரங்கித் துப்பாக்கிகள் மற்றும் தாக்குதல் துப்பாக்கிகளையும் வாங்குவதற்கும் இந்திய இராணுவம் தீர்மானித்திருந்தது. (ஜ-2)

## படகுகள் மீது தாக்குதல் நடத்தினால் ஆக்ரோஷமான பதிலடி கொடுக்கப்படும்

### அமெரிக்கர்களுக்கு ஈரான் எச்சரிக்கை



(டெஹ்ரான்)

அமெரிக்கா தங்கள் நாட்டு படகுகள் மீது தாக்குதல் நடத்தினால் ஆக்ரோஷமான பதிலடி கொடுக்கப்படும் என ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈரானிய புரட்சிகர காவற்படை கடற்படையின் 11 படகுகள் அமெரிக்க கப்பல்களுக்கு அருகில் வந்த ஒரு வாரத்திற்குப் பிறகு'எங்கள் படகுகளை கடலில் தொந்தரவு செய்தால் அனைத்து ஈரானிய துப்பாக்கிப் படகுகளையும் சுட்டு அழிக்குமாறு நான் அமெரிக்க கடற்படைக்கு அறிவுறுத்தியுள்ளேன்' என்று ட்ரம்ப் டுவிட் செய்தார். இந்த விடயம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்தநிலையில், அமெரிக்கா இவ்வாறு தாக்குதல் தொடுத்தால், அதற்கு விரைவாக பதிலடி கொடுக்கப்படும் என ஈரான் நாட்டின் புரட்சிகர பாதுகாப்புப்படையின் தளபதி ஜெனரல் ஹாசீன் சலமீ எச்சரிக்கை விடுத்தார்.

மேலும், ஈரான் நாட்டுக்கு சொந்தமான படகுகளையும், போர்ப் படகுகளையும் அச்சுறுத்தும் வகையில் செயற்படும் அமெரிக்க கப்பல்களையும் தாக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சலமீ தெரிவித்தார். (ஜ-2)

# 4000 கடற்படையினர்,குடும்பத்தினர் சுய தனிமைப்படுத்தப்பட்டனர்

(கொழும்பு)

வெலிசறை கடற்படை முகாமினைச் சேர்ந்த நானகாயிரம் கடற்படை வீரர்களும் அவர்களது குடும்பத்தினரும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

அத்துடன் குறித்த அனைவருக்கும் பிசிஆர் பரிசோதனை செய்யப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் 30 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-2)

# மாட்டைத் திருடி இறைச்சியாக்கிய விசமிகள்; அல்லைப்பிட்டியில் பட்டப்பகலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - அல்லைப்பிட்டியில் மேய்ச்சலுக்காக கட்டியிருந்த மாட்டைத் திருடிய விசமிகள் அதை இறைச்சியாக்கிய சம்பவம் அப்பகுதி மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயியொருவர் மூன்று மாடுகள் வளர்த்து வருகிறார். கடந்த 18 ஆம் திகதி சனிக்கிழமை தனது வீட்டுக்கு அருகே சின்னமண்குழி குளத்தடியில் மேய்ச்சலுக்காக மாடுகளைக் கொண்டு போய்க் கட்டினார். பின்னர் பிற்பகல்03 மணியளவில் மாடுகளுக்குத் தண்ணீர் வைத்தார். இதன் பின்னர் மாலை 5 மணியளவில் மாடுகளை கட்டிய இடத்தில் சென்று பார்த்த போது ஒன்றரை வயது மதிக்கத்தக்க "வெள்ளை" என அழைக்கப்படும் குறித்த மாட்டைக் காணவில்லை. பின் அயலிலுள்ள விவசாயிகளிடம் மாட்டைக் காணவில்லை எனத் தெரிவித்ததுடன் அவர்களுடன் சேர்ந்து தேடினார்.

இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை அல்லைப்பிட்டி வைரவர் கோவிலுக்குப் பின் பக்கத்திலுள்ள பற்றைக்குள் குறித்த மாடு தலையுடன் எலும்புக் கூடாக மீட்கப்பட்டது. இதனையடுத்து திருட்டுப் போன மாடு இறைச்சியாக்கப்பட்டு அங்கிருந்து கொண்டு செல்லப்பட்டிருக்கலாமெனச் சந்தேகம் வெளியிடப்பட்டது. (இ-18)

# கார்- மோட்டார் சைக்கிள் விபத்து ஒருவர் வைத்தியசாலையில் அனுமதி



(யாழ்ப்பாணம்)

கார்-மோட்டார் சைக்கிள் மோதிஏற்பட்ட விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். யாழ்ப்பாணம் பலாலி வீதி இலுப்பையடி சந்தியில் நேற்று முன்தினம் பிற்பகல் 1.15 மணியளவில். இந்த விபத்து இடம்பெற்றது. பலாலி பக்கமாக இருந்து யாழ்ப்பாணத்தை நோக்கிப் பயணித்த கார். இலுப்பையடிச் சந்தியை அண்மித்த பகுதியில். திருப்பிய போது. யாழ்ப் பாணத்திலிருந்து. பலாலி வீதிப் பக்கமாக சென்ற மோட்டார் சைக்கிள் மோதியது. இதில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் காருக்கு மேலாக பாய்ந்து நிலத்தில் விழுந்ததனால். அவருடைய முகத்தில் காயம் ஏற்பட்டது.

இந்நிலையில். யாழ். போதனா வைத்திய சாலையில் குறித்த நபர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து விசாரணைகளை முன்னெடுத்தனர். (இ-101)

## வைத்தியரைத் தாக்கியவருக்குப் பிணை

# மீண்டும் கைது செய்யாவிடில் போராட்டத்தில் குதிப்போம்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கம்பஹா)

கம்பஹா போதனா வைத்தியசாலை வைத்தியர் மீது தாக்குதல் மேற்கொண்டவருக்குப் பிணை வழங்கியிருப்பதால் வைத்தியரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அதனால் சந்தேக நபரை மீண்டும் கைது செய்ய வேண்டும். இல்லாவிட்டால் தொழிற்சங்கப் போராட்டத்துக்குச் செல்வோம் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் கம்பஹா வைத்திய கிளை தலைவர் வைத்தியர் அருண முணசிங்க தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் கம்பஹா வைத்தியசாலை வளாகத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

கம்பஹா வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவந்த நபர் ஒருவர் உயிரிழந்தமையை அடிப்படையாகக்கொண்டு அவரின் மகன் ஆத்திரமடைந்து கடமையிலிருந்த வைத்தியர் மீது கடுமையாகத் தாக்குதல் மேற்கொண்டார். இந்நிலையில் பொலிஸார் விரைந்து சென்று பாதுகாக்காவிட்டால் வைத்தியரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்திருக்கும்.

அத்துடன் தாக்குதலை மேற்கொண்ட நபரை பொலிஸார் கைது செய்து மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதையடுத்து நீதிமன்றம் சந்தேக நபரை பிணையில் விடுவித்தது.

தாக்குதலுக்குள்ளான வைத்தியர் பாரிய மன அழுத்தத்துக்குள்ளாகி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அதனால் வைத்தியரின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு சந்தேக நபரை மீண்டும் கைது செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றே நாங்கள் தெரிவிக்கின்றோம்.

அத்துடன் தாக்குதலை மேற்கொண்ட நபர் வைத்தியரைக் கொலை செய்வதாகவே அச்சுறுத்தினார். அவ்வாறான நபருக்கு நீதிமன்றம் பிணை வழங்கியமை தொடர்பில் எமக்கு கேள்வி எழுப்ப முடியாது.

அதனால் வைத்தியரின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு சந்தேக நபரை கைது செய்து உரிய தண்டனையை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

இல்லாவிட்டால் இதனை அடிப்படையாகக்கொண்டு நாங்கள் தொழிற்சங்க போராட்டம் ஒன்றுக்கு செல்ல வேண்டிவரும். அவ்வாறு இடம்பெற்றால் முழு நாடும் செயலிழந்துவிடும். இதற்கு முன்னரும் இவ்வாறான சம்பவம் ஒன்று இடம்பெற்ற போதும் நாங்கள் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

எனவே இச்சம்பவம் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் தொழிற்சங்க போராட்டத்துக்கு செல்வோம். இது தொடர்பாக எமது தாய்ச் சங்கமான அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துக்கும் அறிவித்திருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உலருணவு வழங்கல்



சுழிபுரம் பகுதியிலுள்ள காட்டுப்புலம். பாண்டவெட்டை கிராமங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 106 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் நேற்று முன் தினம் வழங்கப்பட்டன.

வெண்கரம் படிப்பகத்தில் கல்வி கற்றுவரும் மாணவர்களின் குடும்பங்களுக்கே உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

மயிலிட்டியைச் சேர்ந்தவரும் டென்மார்க்கில் வசித்துவருபவருமான ப.காண்டீபன் வழங்கிய நிதி உதவியில் வெண்கரம் செயற்பாட்டாளர் இரா.மயூரதரனின் ஏற்பாட்டில் தலா ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொதிகளே இவ்வாறு வழங்கப்பட்டன.

# மக்கள் சக்தியிலிருந்து விலகி எவரும் ஐ.தே.கவுடன் இணையமாட்டார்கள்

## மத்தும பண்டார நம்பிக்கை



(கொழும்பு)

எமது தரப்பிலிருந்து விலகி சிலர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துகொள்வதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாக வெளியான செய்திகள் முற்றிலும் பொய்யானவை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாக நேற்று சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டது. அதற்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரால் வெளியிடப்பட்ட அறிக்கையில்.

எமது தரப்பிலிருந்து விலகி சிலர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துகொள்வதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாகக் குறைந்தபட்ச ஊடக தர்மத்தையேனும் பின்பற்றாமல் குறித்த சிங்கள ஊடகத்தால் செய்தியொன்று வெளியிடப்பட்டிருக்கிறது. இச்செய்தியை நாம் முற்றாக மறுக்கின்றோம்.

நீண்ட வரலாற்றைக் கொண்ட. சிரேஷ்ட தலைவர்களால் நிர்வகிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி இன்று இத்தகைய பொய்யான வதந்திகளுக்கு ஆளாகும் நிலைக்குத் தள்ளப்பட்டமை கவலைக்குரிய விடயமாகும். பெருமளவான ஊழல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய. அரசாங்கத்துடன் சூழ்ச்சிகரமான "டீல்களை" செய்து கொண்ட. மக்களுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடும் இரண்டு. மூன்று பேரால் நிர்வகிக்கப்படும் அணியில் இணைய வேண்டிய அவசியம் ஐக்கிய மக்கள் சக்தியிலுள்ள எவருக்கேனும் இருக்குமென நாம் கருதவில்லை.

தற்போதைய நெருக்கடி நிலையில் அரசியல் நலன் நோக்கங்களை விடுத்து நாட்டின் நலன்கருதி செய்ய வேண்டிய பல்வேறு விடயங்கள் உள்ளன என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மருமகன் தாக்கி மாமியார் பலி

(தம்புள்ளை)

தம்புள்ளை - பெல்வெர பகுதியில் மதுபோதையில் இருந்த மருமகனால் தாக்கப்பட்ட வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதுடன். உயிரிழந்த பெண்ணின் மகளும். இன்னுமொரு நபரும் காயமடைந்தனர்.

தம்புள்ளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெல்வெர பகுதியில் வீடொன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மோதல்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சம்பவத்தின் போது மது போதையில் இருந்த நபர் அவரது மனைவி மற்றும் மனைவியின் தாயாருடன் முரண்பாட்டை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்.

இதன்போது மோதல்கள் ஏற்பட்டுள்ளதுடன் மது போதையில் இருந்த நபர் அவரது மனைவி மற்றும் மாமியை கூரிய ஆயுதங்களால் தாக்கியுள்ளதுடன் இவர்களை சமாதானப்படுத்தும் நோக்கில் வந்த அயலவர் ஒருவரையும் தாக்கியுள்ளார்.

இதன்போது படுகாயமடைந்த மூவரும் தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இந்நிலையில் 61 வயதுடைய சந்தேக நபரின் மாமியார் உயிரிழந்தார். அவரது மனைவியும் மற்றைய நபரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபரை கைது செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-2)

# புத்தாண்டு இராசி பலன்கள்

## 14.03.2020-13.04.2021

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்






சார்வரி வருடத்தொடக்கத்தில், உங்கள் இராசிநாதன் சனி, விரய ஸ்தானத்தில் கேது மற்றும் சந்திரனோடு இணைந்து சஞ்சரிக்கிறார். உங்கள் இராசிக்கு 4, 11 இற்கு அதிபதியான செவ்வாய், 3, 12 இற்கு அதிபதியான குரு இணைந்து குரு-மங்கல யோகத்தை வழங்குகின்றனர். 6 இல் ராகு, ஜென்மத்தில் குரு இருப்பதால் 'அஷ்டலட்சுமி யோகம்' செயற்படுகிறது. பஞ்சமாதிபதி சுக்கிரன் சொந்த வீட்டிலும் அஷ்டமாதிபதி சூரியன் உச்சம் பெற்றும், 6,9 இற்கு அதிபதியான புதன் நீச்சம் பெற்றும் இந்த ஆண்டு தொடங்குகிறது. ஜென்மச்சனியால் விரயங்களே அதிகரிக்கும். பணம் வந்த மறு நிமிடமே செலவாகலாம். சுப விரயங்களை மேற்கொள்ளுங்கள்.

### ராகு- கேது பெயர்ச்சி

1.9.2020 அன்று ராகு 5 ஆம் இடத்திற்கும் கேது 11 ஆம் இடத்திற்கும் பெயர்ச்சியாகிறார்கள். ஐந்தில் சஞ்சரிக்கும் ராகுவால் பிள்ளைகள் வழியில் சுபவிரயங்கள் ஏற்படும். வரன்கள் முடிவாகும். வளர்ச்சிக்கு வித்திட்டவர்களை சந்தித்து முக்கிய முடிவெடுப்பீர்கள். இலாப ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால் ஆன்மீகத்திற்கு என்று ஒரு தொகையை ஒதுக்குவீர்கள். குறிப்பாக ஆலய திருப்பணிகள் செய்யும் யோகம் உண்டு. வீடு வாங்கும் யோகம், வாகனம் வாங்கி பயணிக்கும் யோகம் உண்டு.

### குருப்பெயர்ச்சி

15.11.2020 அன்று குரு, மகர இராசிக்கு பெயர்ச்சியாகிறார். இது குருவுக்கு நீச்ச வீடு. இருப்பினும் நீங்கள் எதிர்பார்த்த நற்பலன்கள் உங்களுக்குக் கிடைக்கும். அதிக பயணத்தை உருவாக்கும் நேரமாக இந்த நேரம் நிகழலாம். 3, 12 ஆகிய மறைவிடங்களுக்கு அதிபதியானவர் குரு.

அவர் நீச்சம் பெறுவதால் 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜ யோகம்' என்ற அமைப்பில் சிலருக்கு ஆச்சரியப்படத்தக்க சம்பவங்கள் நடைபெறும்.

தெளிந்த சிந்தனையோடு செயற்படுவீர்கள். திருமணம் கைகூடும். பொருளாதார முன்னேற்றம் ஏற்படும்.

### சனிப்பெயர்ச்சி

26.12.2020 அன்று வாக்கிய பஞ்சாங்கப்படி சனி பகவான், மகரத்திற்கு பெயர்ச்சியாகிறார். ஏழரை சனியில், ஜென்ம சனி வரும்பொழுது, ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை காட்ட வேண்டும். சென்ற ஆண்டை காட்டிலும் இப்பொழுது சில பிரச்சினைகள் புதிதாக வந்து ஊடுருவும். கவலை அகல, வழிபாட்டை முறையாக மேற்கொள்ளுங்கள். திடீரென மாற்றங்களும் ஏற்றங்களும் வந்துகொண்டே இருக்கும். குடும்ப பிரச்சினைகளை தக்க சமயத்தில் சமாளிப்பது நல்லது.

### குரு வக்கிரமும் அதிசாரமும்

13.5.2020 முதல் 7.7.2020 வரை குருபகவான் அதிசாரமாகவும் வக்கிரம் பெற்றும் சஞ்சரிக்கிறார். 8.7.2020 முதல் 9.9.2020 வரை தனுசு இராசியில் குரு வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். அதேநேரத்தில் சனியும் வக்கிர கதியிலேயே குருவோடு இணைந்திருக்கிறார். மீண்டும் 6.4.2021 இல் கும்ப இராசிக்கு, குரு பகவான் செல்கிறார். இது போன்ற காலங்களில் நற்பலன்கள் உங்களுக்கு கிடைக்கும். 12 இற்கு அதிபதி வக்கிரம் அடையும் போது செலவுக்கேற்ற பணம் உங்களுக்கு வந்து கொண்டேயிருக்கும்.

### வழிபாடு

சனிக்கிழமை தோறும் சஞ்சீவி மலையை தூக்கி செல்லும் அனுமனின் அலங்கார கோலத்தை வழிபட்டு வாருங்கள்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இந்த புத்தாண்டு, உங்களுக்கு நன்மைகளை கொடுக்கும் விதத்தில் அமைந்துள்ளது. பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை ஏற்பட, விட்டு கொடுத்து செல்ல வேண்டும். குடும்ப இரகசியங்களை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு ஓரளவே கிடைக்கும். பிள்ளைகளை உங்களின் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. ஆபரணச் சேர்க்கை உண்டு.






சார்வரி வருடத்தொடக்கத்தில், உங்கள் இராசிநாதன் சனி, கேதுவோடும் சந்திரனோடும் இணைந்து இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். விரய ஸ்தானத்தில் இலாபாதிபதி குருவும் 3, 10 இற்கு அதிபதியான செவ்வாயும் இணைந்திருக்கிறார்கள். பஞ்சம அஷ்டமாதிபதியான புதன் நீச்சம் பெற்றும், சப்தமாதிபதி சூரியன் உச்சம் பெற்றும், சுகஸ்தானாதிபதி சுக்கிரன் சொந்த வீட்டில் பலம் பெற்றும், ராகு பஞ்சம ஸ்தானத்திலும் சஞ்சரித்தபடி இந்த ஆண்டு தொடங்குகிறது. பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய பாதை புலப்படும். எதையும் நிதானமாக செய்யுங்கள்.

### ராகு-கேது பெயர்ச்சி

1.9.2020 அன்று உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் ராகுவும் 10 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்க போகிறார்கள். ராகுவால் தாய்வழி ஆதரவு தானாக வந்து சேரும். புதிய வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். நீங்கள் தீட்டிய திட்டங்கள் நிறைவேறும். தேக நலனில் அக்கறை தேவை. கேதுவால் தொழில் வளர்ச்சி சிறப்பாகும். பாக்கிகளை வசூல் செய்வதில் மும்முரம் காட்டுவீர்கள். ஆன்மீக பற்றுதல் அதிகரிக்கும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும்.

### குருப்பெயர்ச்சி

15.11.2020 அன்று குரு பகவான், மகர இராசிக்கு பெயர்ச்சியாகி செல்கிறார். தன விரயம் ஏற்படும். என்றாலும் அதை சுப விரயமாக மாற்றுவது உங்கள் புத்திசாலித்தனம். தாய்வழி ஆதரவு கிடைக்கும். உறவினர்களிடம் உண்டான மனக்கசப்பு மாறும். நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். நிகழ்கால தேவைகள் பூர்த்தியாகும். எதிரிகள் பலம் குறையும். பொது வாழ்வில் ஏற்பட்ட களங்கங்கள் அகலும். வீடு மாற்றங்களும், இடமாற்றங்களும் விரும்பும் விதத்தில் அமையும்.

### சனிப்பெயர்ச்சி

26.12.2020 அன்று வாக்கிய பஞ்சாங்கப்படி சனி பகவான், மகர இராசிக்கு பெயர்ச்சியாகிறார். உங்களுக்கு ஏழரைச்சனி தொடங்கிவிட்டது. சுய ஜாதகத்தில் சனி பலம்பெற்றிருந்தால் நல்ல பலன்கள் கிடைக்கும். சனிக்குரிய சிறப்பு தலங்களான திருநள்ளாறு, குச்சானூர், பெரிச்சி கோவில், திருக்கொள்ளிக்காடு போன்ற ஸ்தலங்களுக்கு சென்று வாய்ப்பிருக்கும் பொழுது வழிபட்டு வரலாம். ஏழரைச்சனி காலத்தில் எதிலும் தேக்க நிலை அதிகரிக்கலாம். ஊக்கமும், உற்சாகமும் குறையாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

### குரு வக்கிரமும் அதிசாரமும்

13.5.2020 முதல் 7.7.2020 வரை குருபகவான் அதிசாரமாகவும் வக்கிரமாகவும் சஞ்சரிக்கிறார்கள். 8.7.2020 முதல் 9.9.2020 வரை தனுசு இராசியில் குரு வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். அதேநேரத்தில் சனியும் வக்கிரகதியில் குருவோடு இணைந்து சஞ்சரிக்கின்றார். மீண்டும் குருபகவான் 6.4.2021 இல் கும்ப இராசிக்கு அதிசாரத்தில் செல்கிறார்.

தனலாபாதிபதி வலுவிழக்கும் இந்த நேரத்தில் எதையும் யோசித்து செய்வது நல்லது. பணிகள் பாதியிலேயே நிற்கலாம். பக்கபலமாக இருப்பவர்கள் உங்களை விட்டு விலகலாம். சிக்கல்களும், சிரமங்களும் சிறுசிறு பிரச்சினைகளும் பின்தொடரும்.

### வழிபாடு

அஷ்டமி திதியில் விரதமிருந்து வைரவரை வழிபட்டு வருவதால் எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். கணவன் - மனைவி ஒற்றுமை பலப்படும். மகிழ்ச்சியான வாழ்க்கை மலரும்.

இந்த ஆண்டு பெயர்ச்சியால் விரய குருவும் விரய சனியும் வரப்போகிறது. எனவே முறையான வழிபாடு தேவை. வீண் பழி அகலும்.

குடும்ப பிரச்சினைகளை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். உறவினர் பகை உருவாகாமல் பார்த்து கொள்ளுங்கள். உத்தி யோக மாற்றங்கள் வரலாம்.

(தொடரும்)